
விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 19 வெள்ளிக்கிழமை (02.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 104




## அரசியல் மறுசீரமைப்பை விட அபிவிருத்திக்குத்தான் முதலிடம்

### ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் அரசியல் மறுசீரமைப்பை விட அபிவிருத்திக்குத்தான் முதலிடம் என்ற செய்தியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றினார்.

அதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார். நேற்று யாழ். கல்வி வலய வளாகத்தில் வந்திறங்கிய ஜனாதிபதி முதலில் நல்லூர் முருகன் ஆலயத்திற்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்ட ஜனாதிபதி அதன் பின்னர் நாக விகாரையில் வழிபாட்டில் ஈடுபட்டார். அதன் பின்னர் துரையப்பா விளையாட்டரங்கிற்குச் சென்ற ஜனாதிபதி அங்கு வாக்காளர் மத்தியில் உரையாற்றினார். (19 ஆம் பக்கம் பார்க்க)

## நித்தியானந்த சுவாமிகள் இலங்கையில் தஞ்சம்?

(புதுடில்லி)

இந்தியாவில் பொலிஸாரால் தேடப்பட்டு வரும் சுவாமி நித்தியானந்தா இலங்கைக் காடுகளில் மறைந்திருப்பதாக இரகசியத் தகவல் ஒன்று கசிந்திருக்கின்றது என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவருக்கு இங்கு புகலிடம் கொடுத்திருப்பவர் ஒரு பெரும் புள்ளி என்றும் கூறப்படுகின்றது.

இவரைக் காண்பவர்கள் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் தரலாம் என அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நித்தியானந்த சுவாமிகள்-நடிகை ரஞ்சிதா விவகாரத்தினையடுத்து இந்தியாவில் மக்கள் மத்தியில் எதிர்ப்புக் கிளம்பியதால் நித்தியானந்த சுவாமிகள் தலைமறைவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரில் சுமார் ஒன்றரை இலட்சம் வீடுகள் சேதம்

(கொழும்பு)

வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரில் கடந்த 3 வருடங்களில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் வீடுகள் முற்றாகவும் பகுதியாகவும் அழிவடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் மதிப்பீடு ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையில் வன்னியில் நடைபெற்ற போரில் தமிழ் மக்களின் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் வதிவிடங்கள் முற்றாகவும் பகுதியாகவும் அழிவடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்ட மதிப்பீடுகளில் தெரிய வந் (19 ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவின் உடல் நலத்திற்கு பொறுப்பு நிற்கிறார் அமைச்சர் டலஸ்!

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவின் உடல் நலத்திற்கான பொறுப்பைத் தான் ஏற்பதாக போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு இயற்கை மரணத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சித்து வருவதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (19 ஆம் பக்கம் பார்க்க)

# இணைந்து ஆட்சியமைப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ.சு.க. பேச்சு?

### ஜனநாயக தேசிய முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் பின்னர் ஆட்சி அமைப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தப்பட்டு வருவதாக ஜனநாயக தேசிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் விடுதலைப்புலிகள் ஆயிரத்து 528 பேர் விடுவிப்பு

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களில் ஒரு தொகுதியினர் உள்ளிட்டோரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தையடுத்து இதுவரை காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த, காயமடைந்து ஊனமுற்ற முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஆயிரத்து 175 பேர், சிறார் போராளிகள் 175 பேர், பல்கலைக்கழக மாணவர்கள் 178 பேர் என மொத்தம் ஆயிரத்து 528 பேர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் வைபவ ரீதியாக விடுவிக்கப்பட்டுள் (19 ஆம் பக்கம் பார்க்க)






**Personal Classes**

English Classes Gr 9-A/L & School Leavers Maths Classes Gr 9-11
Contact
A.Kirushanna
Soda Company Lane, Mallakam.
T.P.:0776283001 (994)


## பிரி.அரசியல் கட்சி குறித்து விசாரணை

(லண்டன்)

பிரிட்டனிலுள்ள அரசியல் கட்சி ஒன்று விடுதலைப்புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தமை குறித்து விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

தேர்தல்கள் ஆணையகத்தின் பதிவிலிருந்து விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணிபற்றிவிலக்கப்பட்டிருப்பதாக பிரிட்டனிலுள்ள இணையத்தளம்ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில்கருத்துத்தெரிவித்த விடுதலைபுலிகளின்மக்கள் முன்னணி கட்சியின் தலைவர் நடராஜ் பாலசுப்பிரமணியம், இலங்கையில் உள்ளவடக்கு மற்றும்கிழக்கு மாகாணங்களுக்கான தனி நாடென்றைஏற்படுத்துவதில் தான் ஈடுபட்டிருப்பதாகவும் கூறினார்.

ஆனால் ஒரு போதும்தான்வன்முறைசெயல்களில்ஈடுபட்டிக்கவில்லைஎனவும் நடராஜ் பாலசுப்பிரமணியம்தெரிவித்தார். (எ-5)

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கட்சி குறித்து விசாரணை ஆரம்பம்?

(கொழும்பு)

பிரித்தானியாவில் பதிவு செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கட்சி குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியாவில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புக்களில் ஒன்றாகக் கருதப்படும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் குறித்த கட்சிக்கும் இடையில் தொடர்பு எதுவும் காணப்படுகின்றதா என்பது குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கட்சி அந்நாட்டு தேர்தல் செயலகம் முன்னர் அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் தற்போது குறித்த பதிவு ரத்து செய்யப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள தேர்தலில் குறித்த கட்சியின் சார்பில் வேட்பாளர்களை நிறுத்த உத்தேசித்துள்ளதாக கட்சியின் தலைவர் நடராஜா பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக பயங்கரவாத முத்திரை குத்தப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

தேர்தலில் வெற்றியீட்ட முடியுமா என்பது குறித்து தமக்கு தெரியாது எனவும் தமது கருத்துக்களை முன்வைப்பதே பிரதான இலக்கு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த கட்சி பதிவு தொடர்பில் முறைபாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இதனால் பதிவு தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல் செயலக அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார். (எ-5)

## உரிய நேரத்தில் குமரன் பத்மநாதன் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார்

## அமைச்சர் றோகித தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் உரிய நேரத்தில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படுவார் என வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தள்ளார்.

குமரன் பத்மநாதனை நீதிமன்றில் ஆஜர் படுத்துவது தொடர்பான திகதி இதுவரையில் அறிவிக்கப்படவில்லை. அரசாங்கம் தொடர்ச்சியாக விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

இலங்கையின் சட்ட விதிகளுக்கு அமைவாகவே குமரன் பத்மநாதன் கைது செய்யப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பௌதிக ஒருமைப்பாட்டை பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு சகல நாடுகளுக்கும் காணப்படுவதாகவும் அதன் அடிப்படையில் குமரன் பத்மநாதனிடம் விசாரணைகளைத் தொடர்வாகவும் அவர்குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குமரன் பத்மநாதனிடம் பல்வேறு தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதனிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் மிகவும் பயனுள்ளது எனவும் இந்தத் தகவல்களின் அடிப்படையில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## படகில் இருந்து இறங்க இலங்கை அகதிகள் தயார்

இந்தோனேசிய மெராக் துறைமுகத்தில் உள்ள இலங்கை அகதிகள் பாரிய அசௌகரிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தற்போதைய நிலைமையை மேலும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது எனவும் இந்தோனேசிய அரசு உறுதியான உத்தரவாதம் வழங்கும் பட்சத்தில் படகில் இருந்து தாம் இறக்கத் தயார் எனவும் அகதிகளின் புதிய பேச்சாளர் நிமல் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய இணையத்தளம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த 6 மாதங்களாக ஒரே படகில் தங்கியிருந்த தாங்கள் எவ்வித வசதிகளும் இன்றி அவஸ்தைப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுமார் 240 அகதிகள் உள்ள இந்தப்படகில் 31 சிறுவர்கள் உள்ளனர். அவர்களும் தற்போது பல்வேறு நோய்களில் அவதிப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் தற்போது படகில் இரவு நேரங்களில் உறங்க முடியாத வகையில் எலிகள் கடித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போதைய நிலைமையை மேலும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாதென தெரிவித்த அவர் இந்தோனேசிய அரசாங்கம் உறுதியான உத்தரவாதம் வழங்கும் பட்சத்தில் படகிலிருந்து தாம் இறங்கத்தயார் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ச)

## இளம் குடும்பஸ்தரை காணவில்லை என முறையீடு

(வேலணை)

வேலணையில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக உறவினர்களால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

தாழிபுலம் சந்தி வேலணை கிழக்கைச் சேர்ந்த காந்தலிங்கம் செல்வம் (வயது 24) என்பவரையே காணவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இவரை கடந்த 30 ஆம் திகதி தொடக்கம் காணவில்லை என நேற்று முன்தினம் முறையிடப்பட்டுள்ளது. (எ-22)


**கனடாவில் கல்வியுடன் கூடிய தொழில் வாய்ப்பு!!**

கனடா நாட்டில் உயர் கல்வியுடன் கூடிய தொழில் வாய்ப்பிற்கான விசா மூன்று மாதத்தினுள் பெற்றுத் தரப்படும். (*100% Visa* உத்தரவாதம்)

எதிர் பார்க்கப்படும் கல்வித்தகமை - *O/L or A/L or Degree / Diploma*

முக்கிய குறிப்பு :- விசா பெற்றுத்தரும் வரை எவ்வித தொகைப்பணமும் எம்மால் உங்களிடம் இருந்து அறவிடப்படமாட்டாது.

நேர் முகப்பரீட்சை வெகுவிரைவில் நடைபெற உள்ளதால் உடன் எமது நிறுவனத்தில் உங்கள் பதிவுகளை மேற்க்கொள்ளவும்.

உங்கள் பதிவுகளுக்கான இறுதித் திகதி :- 10/04/2010

- Conditions for Apply -

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
Call : - 0777 110 862



**சுயேட்சைக்குழு-10**




கலைமாணி, கல்வியியல் முதுமாணி, கல்வியியல் கலாநிதி

**நா.தணிகாசலம்பிள்ளை**

(முதன்மை வேட்பாளர்)

(ச-5018)



**கோழிக் குஞ்சு விநியோகம்**

40 நாட்களில் பூரண நிறையை அடையக் கூடிய BAIRAHA, BAHIRA, PRIMA No.1 புறொயிலர் குஞ்சுகள் விநியோகிக் கப்படும். பதிவுகள் முன் கூட்டியே மேற் கொள் ளவும்.

நடராஜ் எலக்ரோனிக்ஸ்
கந்தரோடை றோட், சுன்னாகம்.
T.P.: 077 9114440
நிஹோான் டிரேடர்ஸ்
204, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வரா பாடசாலைச் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P.: 071 6529527, 0770481816
(1102)



**மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி**

யாழ். மாவட்ட காளைகள் கலந்து கொள்ளும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி ஒன்றை வட்டுக்கோட்டை விவசாயிகள் நடத்தவுள்ளனர்.

இடம் : வட்டுக்கோட்டை கொட்டுத்துறை சவாரித்திடல்
காலம் : 04.04.2010 பிற்பகல் 1.00 மணி

அனைத்து யாழ். மாவட்ட காளைகளையும் தவறாது போட்டியில் கலந்து கொள்ளச் செய்யுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

-வட்டுக்கோட்டை விவசாயிகள்.

(சி-4963)



**அறிவித்தல்**

**ஜெஸ்வின் கணனிப் பயிற்சியகம்**
2ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை

கணனிக் கண்காட்சியினை முன்னிட்டு நடைபெற்ற அதிஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்.

1ம் பரிசு- இல. 1333, 2ம் பரிசு- இல. 1515, 3ம் பரிசு- இல. 114
சிறப்புப் பரிசு - இல.450
ஆறுதல் பரிசு (1) 705 , (2) 1387, (3) 1780, (4) 667, (5) 659, (6) 1435, (7) 3, (8) 1332, (9) 676, (10) 73

(03.04.2010) அன்று காலை 10 மணிக்கு பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

-இயக்குநர்.

(சி-4962)

# இன்று ஒரு தகவல்

## ஆத்திரத்தில் அர்த்தமில்லை

ஒரு முஸ்லிம் பெரியவர் இருந்தார். மிகவும் அனுபவசாலி. இந்த உலகத்தில் எப்படி வாழவேண்டும் என்பதை பலருக்குச் சொல்லிக் கொடுக்கும் தகுதி வாய்ந்தவர்.

ஒருநாள் அந்தப் பெரியவரைத் தேடி ஒருத்தன் வந்தான். அவன் படபடப்புடனும் கோபத்துடனும் காணப்பட்டான்.

காலிலிருந்த செருப்பைக், கழற்றி கோபமாக ஒரு மூலையில் வீசியெறிந்தான். கதவை வேகமாகச் சாத்தினான்.

அதன்பின் மெதுவாக உள்ளே வந்தான். பெரியவரின் முன்னால் போய் நின்று மரியாதை செலுத்தினான். உடனே அந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா?

"இதோ பாரப்பா... உன்னுடைய மரியாதையை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. முதலில் நீ போய் அந்த செருப்பிடமும் கதவிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அதன்பின் என்னிடம் வா" என்றார். வந்தவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்ன இது... செருப்பிடமும் கதவிடமும் மன்னிப்புக் கேட்பதா? அது எப்படி முடியும்? அதெல்லாம் என்ன உயிரோடா இருக்கிறது – மன்னிப்புக் கேட்பதற்கு? என்று நினைத்தான். அதை அந்தப் பெரியவரிடமே கேட்டு விட்டான்.

"அவற்றுக்கெல்லாம் உயிர் இல்லையே..." என்றான்.

அதற்கு அந்தப் பெரியவர் சொன்னார் :

"நீ உன்னுடைய கோபத்தை அவற்றின் மீது காட்டும் போது இப்படி நினைக்கவில்லையே! அந்த செருப்பு இரண்டும் ஏதோ பெரிய தப்புப் பண்ணி விட்டதாக நினைத்துக் கொண்டு தூக்கி எறிந்தாய். கதவைப் போய் விரோதியாக நினைத்துக் கொண்டு வேகமாகத் தள்ளினாய். உன்னுடைய கோபத்தைக் காட்டுவதற்கு மட்டும் அவற்றுக்கெல்லாம் உயிர் இருப்பதாக நினைக்கும் போது மன்னிப்புக் கேட்பதற்கும் அவற்றுக்கெல்லாம் உயிர் இருப்பதாகத்தான் நினைக்க வேண்டும்" என்றார்.

பெரியவர் சொல்வதை மறுக்கக் கூடாது என்று நினைத்து அந்த செருப்புகளிடம் போய்க் கும்பிட்டான்.

நண்பர்களே... உங்களை அவமதித்து விட்டேன். மன்னித்து விடுங்கள் என்றான்.

அடுத்ததாக கடவுளிடம் போனான். ஏதோ கோபத்தில் உங்களைப் பிடித்து அப்படி வேகமாகத் தள்ளிவிட்டேன். அதற்காக இப்போது வருத்தப்படுகிறேன்" என்றான்.

இப்படிக் கேட்டவுடன் அவனுடைய மனம் மிகவும் இலேசாக ஆகிவிட்டதாம். அமைதியும் சாந்தமும் கிடைத்ததாம். இது அவனுக்கே மிகவும் ஆச்சரியமாக இருந்ததாம்.

ஒரு கதவிடமும் ஒரு ஜோடி செருப்பிடமும் மன்னிப்புக் கேட்பதனால் ஒருமனிதன் இந்தளவுக்கு அமைதியும் சந்தோஷமும் பெறமுடியும் என்பதை அவனால் கற்பனை பண்ணிக் கூடப் பார்க்க முடியவில்லையாம்.

அப்படி மன்னிப்பு கேட்ட பின்னர் அவன் மறுபடியும் உள்ளே போய் அந்த முஸ்லீம் பெரியவரின் பக்கத்தில் உட்கார்ந்தான். இப்பொழுது அவர் சிரித்துக் கொண்டே சொன்னாராம். இப்ப எல்லாம் சரியாகிவிட்டது. இப்பொழுதுதான் நான் சொல்வதை நீ கேட்க முடியும். இனிமேல் நாம் பேசலாம்.

இப்ப நீ கொஞ்சம் அன்பு செலுத்தியதால் உன்னுடைய பாரம் கொஞ்சம் குறைந்துவிட்டது.

இனிமேல் நமக்கிடையில் நல்லதொரு தொடர்பு இருக்க முடியும்! என்றும் சொன்னாராம். இதிலிருந்து என்ன தெரிகிறது? கோபம் வந்துவிட்டால் செருப்புக்குக்கூட உயிர் இருப்பதாக நினைத்து விடுகிறோம் – என்பது தெரிகிறதா இல்லையா?

கதவிடம் கூட கைகலப்பிற்குத் தயாராகி விடுகிறோம். நம்மில் சிலபேர் போனிடம் கூட கோபத்தைக் காட்டுவார்கள். பொத்தென்று அதை வைப்பார்கள்.

நமது மனம் சரியில்லாத போது போன் என்ன பண்ணும்? பாவம்!

நம்ம ஆள் ஒருத்தன் செருப்புக்கு ரொம்ப மரியாதை கொடுத்துக் கொண்டிருந்தான்.

ஒரு கல்யாண மண்டப வாசலில் அவன் நின்று கொண்டிருந்தான். வெளியில் வருபவர்களின் கால்களிலெல்லாம் பொத்தென்று விழுந்து... அவர்களின் செருப்பைத் தொட்டுக் கும்பிட்டுக் கொண்டிருந்தான்.

இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு ஆளா என்று நினைத்துக் கொண்டே கிட்டே போனேன். என் காலிலும் பொத்தென்று விழுந்தான்.

"ஏனப்பா இப்படிச் செய்கிறாய்?" என்று கேட்டேன்.

"என்னுடைய செருப்பு காணாமல் போய்விட்டது சேர்... எவன் அதை போட்டுக் கொண்டு வருகிறான் என்று செக் பண்ணிக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச சனசமூக நிலையங்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நடத்தப்படவிருக்கும் மேற்படி கலந்துரையாடல் கடந்த 31 ஆம் திகதி புதன்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுபற்றிய அறிவித்தல் சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேச சபையூடாக சனசமூக நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-29)

# பனைசார் உற்பத்தியை மேம்படுத்த உற்பத்தியாளர்கள் முன்வர வேண்டும்

## பனை அ.வி.சபை விரிவாக்கல் உத்தியோகத்தர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பனையிலிருந்து பெறப்படும் மூலப் பொருட்களின் தரத்தினை அறிந்து அதனை உற்பத்தி செய்வதற்கு உற்பத்தியாளர்கள் அனைவரும் ஒருமித்து செயற்பட வேண்டும் என பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்கல் உத்தியோகத்தர் கா. கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளரின் அனுசரணையுடன் யாழ். கொட்டடி மீனாட்சியம்மன் மாதர் கிராம அபிவிருத்திசங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பனங்கைப்பணிப் பயிற்சி நிலையம் ஆரம்பித்து வைக்கும் விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கில் பனை வளம் அதிகமாக உள்ளது.

பனையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள் அல் லது கைப்பணிப்பொருள் என்பனவற்றை சந்தைப்படுத்தும் வசதி தற்போது அதிகமாக உள்ளது.


ஆனால் உற்பத்தியாளர்கள் மிக குறைவாகவே காணப்படுவதாக தெரிவித்தார்.

எனவே பனை உற்பத்தி பொருட்களுக்கு கேள்வி அதிகமாக இருப்பதனால் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை அதிகரித்து வருமானத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றார். (2-30)

# இலங்கை முதலீட்டு சபையின் யாழ்ப்பாணக் கிளை திறப்புவிழா

இலங்கை முதலீட்டுச் சபையின் யாழ்ப்பாணக் கிளை காரியாலய திறப்புவிழா இன்று காலை 9.30 மணிக்கு கண்டிவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடமைப்பு செயலக கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க பெரேராவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இத் திறப்புவிழாவிற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினர்ாக கலந்து கொள்வதுடன் யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேந்திர ஹத்துருசிங்க மற்றும் இலங்கை முதலீட்டுசபை, இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை, யாழ். மாவட்ட திட்டமிடல் செயலகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, பொலிஸ் திணைக்களம் போன்றவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-30)



தந்தை செல்வாவின் 113 ஆவது பிறந்ததின நிகழ்வு நேற்று முன்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். தலைமைச் செயலகத்தில் இடம்பெற்ற போது கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்துவதை படத்தில் காணலாம். (படம் : டுசாந்தன்)

## இராசி பலன்


02-04-2010
(பங்குனி 19 , வெள்ளிக்கிழமை)
சதுர்த்தி பின்னிரவு 4.05 மணிவரை
விசாகம் முன்னிரவு 9.12 மணிவரை
இராகுகாலம் 10.41- 12.11 மணிவரை
சுபநேரம் 6.11 – 7.41 மணிவரை
செல்லத்துரை சுவாமிகள் சமாதியடைந்த தினம், சங்கடஹர சதுர்த்தி விரதம், பெரிய வெள்ளி.


| | |
|---|---|
| மேடம் | தெய்வ தரிசனம், நண்பர்கள் சந்திப்பு, பிரயாண நன்மை, நல்ல செய்தி. |
| இடபம் | தொழிலில் ஆர்வம், தெய்வ தரிசனம், ஆரோக்கிய நிலை, முயற்சி கைகூடும். |
| மிதுனம் | எடுத்த காரியம் தாமதமாகும், பணக்குறைவு, கௌரவக்குறைவு, ரோகநிலை. |
| கடகம் | பித்த ரோகம், மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், போசன சுகம். |
| சிங்கம் | வாக்கு மேன்மை, முயற்சி கைகூடும், தெய்வ தரிசனம், கலந்துரையாடல். |
| கன்னி | வேலைச்சுமை, அதிக செலவு, ஆரோக்கியக்குறைவு, வீண்பகை. |
| துலாம் | தெய்வ சிந்தை, செய்தொழில் நன்மை, ஆரோக்கியம், காரிய அனுகூலம். |
| விருச்சிகம் | காரிய அலைச்சல், ரோக நிலை, தனவிரயம், உறவினர் பகை. |
| தனுசு | தெய்வ சிந்தை, பெருமையடைதல், முயற்சி கைகூடும், தன வருவாய். |
| மகரம் | இனிய செய்தி, காரிய நன்மை, உடல் நலம், நண்பர்கள் சந்திப்பு. |
| கும்பம் | கட்டுப்பாடு, திடீர் பயணம், வீண் பகை, காரிய தாமதம். |
| மீனம் | வாகன பயம், முயற்சி தாமதம், பணவிரயம், அவமானம். |

வளவன்


# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 70 |
| தக்காளி | 40 | 50 | 30-40 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 30 | 40 | 40 |
| கரட் | 80 | 90 | 100 |
| பூசணி | 25 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 50 |
| பெரிய வெங்காயம் | 40 | 70 | 50 |
| பாகற்காய் | 80 | 90 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 40 | 60 | 40 |
| லீக்ஸ் | 40 | 70 | 90 |
| பீற்றூட் | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 70 | 80 | 50 |
| முருங்கைக்காய் | 300 | 320 | 300 |
| போஞ்சி | 70 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | 50 |
| கீரை – 1 பிடி | 25 | 30 | 25 |
| தேசிக்காய் | 80 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |





யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நல்லூரில் மற்றும் நாகவிகாரையில் வழிபாட்டில் ஈடுபட்டிருப்பதையும் இலங்கையின் முப்படைத் தளபதிகளையும் மேலுள்ள படங்களிலும் துரையப்பா விளையாட்டரங்கில் நடை பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட மதகுரு மார்கள் மற்றும் அரச பிரதிநிதிகளையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களின் ஒரு தொகுதியி னரையும் அடுத்துள்ள படங்களிலும் ஜனாதிபதி மகிந்த உரையாற்றுவதையும் பொது மக்களுக்கென இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடுகளுக்கான திறப்பை யாழ்.கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் கத்துரு சிங்க ஜனாதிபதியிடம் கையளிப்பதையும் அதனை ஜனாதிபதி உரியவர்களிடம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# பூகம்பத்தை முன்கூட்டியே கண்டுபிடிக்கும் தவளை

பூகம்பம் ஏற்படுவதை முன் கூட்டியே தவளைகள் கண்டுபிடித்து விடுவதாக தெரிய வந்துள்ளது. இங்கிலாந்தில் மில்டன் கெய்னஸ் பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானி ராஜெல் கிரான்ட் தவளைகள் நடவடிக்கை பற்றி ஆராய்ச்சி செய்து வருகின்றார்.

இவர் பூகம்பம் ஏற்படப் போவது தவளைக்கு முன்கூட்டியே தெரிந்து விடுவதாக கண்டுபிடித்துள்ளார்.

இத்தாலியில் 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் திகதி நில நடுக்கம் ஏற்பட்டது. அப்போது சான்ரா பினோவில் உள்ள ஏரியில் வாழும் தவளைகள் குறித்து ராஜெல் கிராண்ட் ஆய்வு செய்து கொண்டிருந்தார்.

பூகம்பம் ஏற்படுவதற்கு 6 நாட்களுக்கு முன்பு அங்கிருந்த தவளைகளின் நடவடிக்கையில் மாற்றம் தெரிந்தது. 5 நாட்களுக்கு முன்பு 96 சதவீத ஆண் தவளைகள் அங்கிருந்து வெளியேறிவிட்டன. 3 நாட்களுக்கு முன்பு அனைத்து தவளைகளும் வெளியேறி சென்றுவிட்டன. பின்னர் பூகம்பம் முடிந்து 6 நாட்களுக்கு பிறகு அதேஏரிக்கு திரும்பி வந்து விட்டன.

தவளைகள் திரும்பி வந்த பிறகு அதிர்வுகள் கூட நின்று விட்டன. எனவே தவளைகள் சிறிது அதிர்வையும் முன் கூட்டியே கண்டுபிடித்து விடுவதாகவும் அவர் கூறினார்.

எலி, பாம்பு, எறும்பு போன்றவையும் பூகம்பத்தை முன் கூட்டியே கண்டு பிடித்து விடுவதாக ஏற்கனவே தகவல் வந்துள்ளன. (ஓ-2)

# 5 அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஜப்பான் 48,730 மில்லியன் ரூபா உதவி !

(கொழும்பு)

ஐந்து அபிவிருத்தித் திட்டங்களுக்கென ஜப்பான் அரசு 48 ஆயிரத்து 730 மில்லியன் ரூபாவை இலங்கையின் உத்தியோக பூர்வ அபிவிருத்தித் திட்டத்திற்கான உதவி வழங்கல் திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளது.

வருடாந்தம் ஜப்பான் அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் நிதி உதவித் திட்டத்தின் 40 ஆவது நிதியாகவே இத் தொகை வழங்கப்பட்டுள்ளது என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

வழங்கப்படும் இந்நிதி நிர்வாகத்தை இங்குள்ள ஜப்பானிய ஜாய்க்கா நிறுவனம் மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-6)

# பகுப்பாய்வு படிவங்களை நாளை ஒப்படைக்கவும்

யாழ்.கல்வி வலயத்தில் கடந்த மாதம் 18ஆம் திகதி நடைபெற்ற கணிதபாட நிலையறி மதிப்பீட்டின் தரம் 7முதல் 11 வரையிலான வகுப்புக்களின் பகுப்பாய்வு படிவங்களை இதுவரை ஒப்படைக்காத பாடசாலைகள் அவற்றை நாளை சனிக்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில் தவறாது ஒப்படைக்கு மாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். ஓ


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1935 03 02

இறப்பு 2009 04 14



## அமரர் தம்பையா சின்னம்மா

திதி-02.04.2010

ஆண்டுகள் பல கடந்தாலும்
நீங்காது அம்மா உன் நினைவுகள்

இல.1112, திருநகர்,
கிளிநொச்சி.

த.குலசிங்கம் (மகன்)
மீசாலை வடக்கு,
வேம்பிராய்.

(0001)


# தமிழ்த்தினப் போட்டியை முன்னிட்ட நாட்டுக்கூத்துப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வலயமட்ட தமிழ்த்தினப் போட்டியை முன்னிட்டு கடந்த 28ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட நாட்டுக்கூத்துப் போட்டி முடிபுகள் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது.

போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரம் ஒழுங்கு முறையில் தரப்படுகிறது.

**சிந்துநடை**

மந்துவில் றோமன் கத்தோலிக்க த.க. பாடசாலை, மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தி.

**இசைநாடகம்**

கைதடி முத்துக்குமாரசாமி ம.வித்தி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி

**வடமோடி**

கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை. (ஓ-29)

# வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(வேலணை)

வலி.கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட (கோப்பாய் உப அலுவலகம்) கிராமங்களின் சிறுவீதிகள் நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாமல் கற்குவியல்களும் பள்ளங்களும் நிறைந்த வீதியாகக் காணப்படுவதால் அவ் வீதியால் பயணம் செய்யும் பொதுமக்கள் பலத்த சிரமங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் பயணிக்கும் மக்களின் நன்மை கருதி சம்பந்தப்பட்டவர்கள் வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலமாக இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (ஓ-4-22)

# கம்பஹா மாவட்டத்தில் பாராளுமன்றத்தை அமைக்க அரசாங்கம் திட்டம்

பாராளுமன்றத்தை கம்பஹா மாவட்டத்தில் அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஆங்கில பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் இம்முறை கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடும் சிரேஷ்ட அரசியல் தலைவர் ஒருவரினால் இந்த யோசனைத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் ஆளும் கட்சியின் இந்தத் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் பாராளுமன்றத்தை அமைக்கும் திட்டத்திற்கு தமது கட்சி கடும் எதிர்ப்பை வெளியிடுவதாகவும் வீதியில் இறங்கி போராட்டங்களை நடத்தவுள்ளதாகவும் ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# ஜெனரலின் சம்பந்திக்குப் பணம் கொடுத்த வர்த்தகர் விளக்கமறியலில்

(கொழும்பு)

ஜெனரல் பொன்சேகாவின் மருமகன் தனுன திலகரத்தினவின் தாயாருக்கு 780 இலட்சம் ரூபாவைக் கொண்டு சென்று கொடுத்ததாகக் கூறப்படும் நாவல பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பரண லியனகே சஞ்சீவ குமார என்ற இந்தச் சந்தேக நபர் நேற்று முன்தினம் கல்கிஸ்ஸ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போதே அவரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

சந்தேக நபருக்குப் பிணை வழங்கினால் விசாரணைகளுக்குத் தடை ஏற்படும் என நீதிமன்றத்தில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இதனடிப்படையில் சந்தேக நபரை இம்மாதம் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ஓ-6)

## தொடர்ந்தும் விளக்கமறியலில் புனர்வாழ்வுக்கழக உறுப்பினர்கள்

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் பலர் நேற்று முன்தினம் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. யுத்தத்தின் போது இந்த அமைப்பின் சந்தேகநபர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு நிதியுதவி வழங்கினார்கள் என்று இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் என்று இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (2-6)

# ஆண் வேட்பாளர்களினால் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகள் கண்டு அஞ்சப்போவதில்லை

## ஐ.தே.க. பெண் வேட்பாளர்கள்

(கொழும்பு)

ஆண் வேட்பாளர்களினால் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளை எதிர்கொள்ளத் தயார் என ஐக்கிய தேசிய கட்சி பெண் வேட்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஆண் வேட்பாளர்கள் பல்வேறு வழிகளில் தமக்கு இடையூறுகளை ஏற்படுத்தி வருவதாக இரத்தினபுரி மாவட்ட ஐ.தே.க. வேட்பாளர் தலதா அது கோரல குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் கால வன்முறைகள் தமக்கு புதிய விடயமல்ல எனவும் நிலைமைகள் மோசமடைந்தால் அதனை எவ்வாறு எதிர்நோக்குவதெனத் தமக்குத் தெரியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஆண் வேட்பாளர்களினால் தொடர்ச்சியாக கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளை எந்நாளும் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை என குருணாகல் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பெண் வேட்பாளர் உபுலாங்கனி மாலகமுவ குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அஹிம்சை வழியிலான அரசியலை மேற்கொள்வதே தமது எண்ணம் என பிரபல தொலைக்காட்சி நடிகையும் ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட வேட்பாளருமான உபேக்ஷா ஸ்வர்ணமாலி தெரிவித்துள்ளார்.

எனினும் வன்முறைகளை கண்டு அஞ்சப் போவதில்லை எனவும் தேவை ஏற்படின் தற்காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (2-6)


## யாழ்ப்பாணம் மாநகரசபை
## வீதிக்குப் பெயர் சூட்டுதல்

மக்களின் வேண்டுகோளுக்கிணங்க பின்வரும் வீதிகளுக்கு பெயர் சூட்டப்பட வுள்ளமையால் இதற்கு பொதுமக்களின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம். மக்களின் கருத்துக்களை /அபிப்பிராயங்களை எதிர்வரும் 2010.04.14 ஆம் திகதிக்கு முன்னர் ஆணையாளர் மாநகரசபை,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

| இல. | வீதியின் பெயர் | புதிய பெயர் |
|---|---|---|
| 1. | பருத்தித்துறை வீதியையும் சங்கிலியன் வீதியையும் இணைக்கும் வீதி- இணைப்பு வீதி | பண்டாரமாளிகை வீதி |
| 2. | கோயில் வீதியிலிருந்து துர்க்கா மணிமண்டபத்திற்கு தெற்கு புறமாக செல்லும் ஒரு சிறிய வீதி | செல்வநாயகம் சதுக்கம் |
| 3. | சட்டநாதர் கோவில் வீதிக்கு அடுத்து வரும் ஒழுங்கை | ஒட்டக்கூத்தர் வீதி |

திருமதி யோ. பற்குணராசா
முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்

(சி/4960)



## பாராளுமன்றத்துக்கு பத்திரிகையாளன் ஸ்ரீகஜன்






X

10 (X)




(சி-5007)

குடாநாட்டு மக்களே வாக்குகளை வீணாக்காமல் யானைச் சின்னத்திற்கு நேரே ஒரு புள்ளடியையும் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் இலக்கமான 08 மற்றும் பத்திரிகையாளர் ஸ்ரீகஜனின் இலக்கமான 10 ஆகியவற்றுக்கு மேல் புள்ளடியிட்டு இருவரையும் அமோக வெற்றி பெறச் செய்வோம் !!!



X

8 (X)



திருமதி விஜயகலா மகேஸ்வரன்
(முதன்மை வேட்பாளர்)

## யானைச் சின்னத்தில் யாழின் மைந்தன் - எஸ். ஸ்ரீகஜன்

# பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் இலஞ்ச ஆணைக்குழுவை நியமிக்க முடியாது

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த



(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் இலஞ்ச ஊழல் முறைப்பாட்டு விசாரணை ஆணைக்குழுவை நியமிக்க முடியாது.

காரணம் பாராளுமன்றம் கலைக்கப் பட்டிருக்கும்போது அரசியலமைப்பு சபையையும் நிறுவமுடியாது. எனவே அதுகுறித்து தேர்தலின் பின்னரே ஆராயமுடியும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இல்ஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் பதவிக்காலம் முடிவடைந்துள்ள நிலையில் அதனை மீள நிறுவுவது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலளார் கேள்வியெழுப்பியுள்ளமை குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் குறித்து அமைச்சர் மேலும் கூறியதாவது,

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் அரசியலமைப்பு சபையை நிறுவ முடியாது. இந் நிலையில் அரசியலமைப்பு பேரவைக்கு பிரதிநிதிகளை நியமிகக் முடியாத சூழலில் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவை தற்போது எவ்வாறு நிறுவமுடியும்.

எனவே பாராளுமன்ற தேர்தலின் பின்னர் புதிய பாராளுமன்றத்திலேயே அது குறித்து ஆராய முடியும்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் பதவிக்காலம் முடிவடைந்துள்ளது என்று தெரியும்.

எனினும் சபை கலைக்கப்பட்டு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவை நியமிக்க முடியாது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். இதுவே அரசாங்கத்தின் பதிலாகும். (ஓ-6)

# மீள் கட்டுமானப் பணிகளுக்கு இந்தியா சீமெந்து வழங்கல்

(கொழும்பு)

மீள்குடியேற்றப்பட்டவர்களின் வசிப்பிடங்களை அமைப்பதற்கான நிர்மாணப் பணிகளுக்கென இந்தியஅரசு 4 இலட்சம் சீமெந்து மூட்டைகளை நேற்று முன்தினம் வழங்கியது.

இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே. காந்த் தேச நிர்மாண தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.கே.கே.குமாரசிறியிடம் சீமெந்து மூடைகளை உத்தியோக பூர்வமாகக் கையளித்தார்.

கொழும்பு போலியாகொடையிலுள்ள அல்ரா டெக் சிமெண்ட் லங்கா நிறுவனத்தில் இக் கையளிப்பு நிகழ்வு நடைபெற்றது. யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வீடு வாசல்களை இழந்தவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

மீளக்குடியமர்த்தப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 8 சீமெந்து மூடைகள் வீதம் வழங்க தேச நிர்மாண அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்திய அரசு ஏற்கனவே 2600 மெற்றிக்தொன் கூரைத் தகடுகளை வழங்கியிருந்தது. அதற்கு மேலதிகமாகவே 20000 மெற்றிக் தொன் கொண்ட நான்கு இலட்சம் சீமெந்து மூடைகளை வழங்க முன்வந்துள்ளது.

மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கு அந்தந்தப் பகுதியிலுள்ள பிரதேச செயலாளரின் சிபாரிசுகளுக்கு அமைய சீமெந்து மூடைகள் வழங்கப்படும்.

இந்திய அரசு இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு உடை மற்றும் சமையலறைப் பாத்திரங்கள் என இலங்கை நாணயப்படி 610 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களையும் முன்பே கையளித்திருந்தது. (2-6)

# நெடுந்தீவு நூலகம் சீராக எப்போது இயங்கும் - மக்கள் விசனம்

(வேலணை)

நெடுந்தீவு பகுதியில் இயங்கி வரும் பிரதேச சபையின் ஆளுகையிலுள்ள நூல் நிலையம் சீரான முறையில் இயங்குவது இல்லையென இந் நூலக வாசகர்களும் மாணவர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

நெடுந்தீவு பிரதேசம் யாழ்ப்பாணத்திலிருந்து நீண்டதூரத்திலுள்ள (கடற்பரப்பில்) கிராமம் ஆகும்.

இங்குள்ள மக்கள் செய்திகளையும் தகவல்களையும் அறிவதற்கு இந் நூலகத்தையே பயன்படுத்துகின்றனர்.

இதேபோல் கூடுமான வாசகர்கள் இந் நூல் நிலையத்தையே தமது அறிவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இடமாக பயன்படுத்துகின்றனர்.

எனவே இப்பகுதி மக்களின் அறிவுத் தேடலை பூர்த்தி செய்யும் பொருட்டு இந் நூலகத்தினை கிரமமாக திறந்து பத்திரிகைப் பகுதி நூல் இரவல் கொடுக்கும் பகுதிகளை சீராக இயங்க செய்யுமாறு நூலக பணியாளர்கள்நெடுந்தீவு பிரதேச சபை யின் செயலாளரிடம் இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர். (2-22)

## பொன்சேகாவின் உதவியாளர்

# சேனக சில்வாவின் பணப்பரிமாற்றம் குறித்து பெல்ஜியத்தில் விசாரணை

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவின் உதவியாளர் சேனக சில்வா, பெல்ஜியம் நாட்டில் சட்டவிரோத பணக்கொடுக்கல் - வாங்கல்களில் ஈடுபட்டமை குறித்து பெல்ஜிய அதிகாரிகள் விசாரணை நடத்திவருகிறார்கள்.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகாவின் ஒருங்கிணைப்புச் செயலாளரான சேனக சில்வா, இலங்கையிலுள்ள சர்வதேச வங்கி ஒன்றில் அவரது கணக்கிலிருந்த பணத்தை அந்த வங்கியின் பெல்ஜிய கிளைக்கு சட்டவிரோதமாக மாற்றினார் என்பதே சேனக சில்வா மீதான குற்றச்சாட்டாகும்.


சில்வா மீதான விசாரணைகளை பெல்ஜிய அதிகாரிகள் நடத்தி முடித்த பின்னர், அவர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து நடவடிக்கை எடுப்பது பற்றி கொழும்பில் சட்டமா அதிபருடன் அவர்கள் தொடர்பு கொண்டு ஆலோசனை கலப்பார்கள் என்று இலங்கை இரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சில்வா சட்டவிரோதமாக பெல்ஜியம் கிளைக்கு மாற்றிய பணத்தை அவரிடமிருந்து வசூலிப்பதற்காக இலங்கை சட்டமா அதிபர் மூலம் சட்டநடவடிக்கை எடுப்பதற்காக பெல்ஜியம் அதிகாரிகள் கொழும்புவர இருக்கிறார்கள்.

பெல்ஜியத்தில் இணையத்தளம் மூலம் சட்டவிரோதமாக பணம் மாற்றம் செய்த குற்றத்திற்காக சில்வா சமுகமளிக்காமல் ஏற்கனவே விசாரணை நடத்தி அவருக்கு இரண்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாக இரகசியப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஓ-6)

# நளினியை விடுதலை செய்ய தமிழக அரசு மறுக்கிறது

## பழ.நெடுமாறன் கடும் கண்டனம்



ராஜீவ் கொலை வழக்கில் தண்டிக் கப்பட் டும், பதினெட்டு ஆண்டுக் காலத்திற்கும் மேலாகச் சிறையில் இருந்து வரும் நளினி யையும் மற்றவர்களையும் விடுவிக்க முதல்வர் கருணாநிதி மறுத்து வருவதற்குப் பொருந்தாத காரணங்களைக் கூறியுள்ளார் என்று மக்கள் உரிமைக் கூட்டமைப்பின் அமைப்பாளர் பழ.நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ராஜீவ் கொலை வழக்கில் தண்டிக்கப் பட்டும், பதினெட்டு ஆண்டுக் காலத்திற்கும் மேலாகச் சிறையில் இருந்து வரும் நளினியையும் மற்றவர்களையும் விடுவிக்க முதல்வர் கருணாநிதி மறுத்து வருவதற்குப் பொருந்தாத காரணங்களைக் கூறியுள்ளார்.

நளினி விடுதலையானால் அவரின் தாயாருடன் தான் இருப்பார். ஆனால் அவர் வசிக்கும் வீட்டைச் சுற்றிப் பல முக்கியமானவர்கள் வாழ்கிறார்கள். அமெரிக்கத் தூதரகமும் உள்ளது. எனவே நளினி விடுதலை செய்யப் பட்டால் சட்டம், ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படும் என்பது முதலாவது காரணமாகச் சொல்லப்படுகின்றது.

நளினி விடுதலை குறித்து மத்திய அரசைக் கலந்து ஆலோசிக்காமல், செயல்படுவதில்லை என நாங்களே எங்களுக்குச் சுய கட்டுப்பாடு விதித்துக் கொண்டோம் என்றும் விசித்திரமான காரணமும் கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இதே வழக்கில் நளினி உட்பட நால்வருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்ட போது, அவர்களின் கருணை மனுக்களை ஆளுநர் தள்ளுபடி செய்ததை எதிர்த்து நால்வர் சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தோம்.

அந்த வழக்கில் மாநில அமைச்சரவையின் பரிந்துரையின்படி தான் ஆளுநர் முடிவெடுக்க வேண்டும் என்ற தீர்ப்புக் கூறப் பட்டது. எனவே நால்வரின் கருணை மனுக்கள் மீது பரிந்துரை செய்யும் அதிகாரத்தை, அப்போது முதல்வராக இருந்த கருணாநிதிக்கு பெற்றுத் தந்தோம். ஆனாலும் நளினி தவிர மற்றவர்களுக்குக் கருணை காட்ட அவர் மறுத்தார்.

அதைப்போல இப்போது கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்வதற்கு மாநில அமைச்சரவைக்கு அரசியலமைப்புச் சட்டத்தின் 161 ஆவது பிரிவு அதிகாரம் அளித்துள்ளது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தித் தான் அண்ணா நூற்றாண்டு விழாவை யொட்டி 1400 க்கும் மேற்பட்ட கைதிகளை விடுதலை செய்தார். இவர்களிற் பலர் பயங்கரமான கொலைக் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள்.

ஆனால் இவர்கள் விடுதலை செய்யப் பட்ட பின் எந்த இடத்திலும் சட்டம், ஒழுங்கு கெடவில்லை. இவர்களிற் பலர் ஆயுதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்கள். மத்திய அரசிடம் கேட்டு இவர்களைக் கருணாநிதி விடுதலை செய்யவில்லை. ராஜீவ் கொலை வழக்குச் சம்பந்தப்பட்டவர்கள் பிரச்சினை எழும் போது மட்டும் மத்திய அரசைக் கேட்க வேண்டும் என்றுநழுவுகிறார்.

சோனியா காந்தியின் அதிருப்திக்கு ஆளாகக் கூடாது என்பதற்காகத்தான் நளினியையும் மற்றவர்களையும் விடுதலை செய்ய மறுக்கி றார். கருணாநிதியின் இந்த மனித நேயமற்ற பாரபட்சமான போக்கை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார். (2-6)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அவர்கள் 27.03.2010 சனிக்கிழமை இடம்பெற்ற யாழ். பல்கலைக்கழகத்தின் 25ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் முதுகல்வியியல்மாணிப் பட்டம் பெற்றதையிட்டு அவரைப் பாராட்டுவதோடு மேலும் பல உயர் பட்டங்களைப் பெற்று சிறப்புடன் வாழ வண்.கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-4958)



திருமதி மாலினி முரளீதரன்

B.A. (Hons)Dip in Ed, M.Ed)

Spl. Trd. (dance)

து.சுரேந்திரன்

பதிவாளர்,

மேன்முறையீட்டு மேல்நீதிமன்றம்.

# அவல நிலை தொடரும் இந்நேரத்தில் மிக்க அவதானத்துடன் செயற்படவேண்டும்

## 09.03.2009 அன்று வீ. ஆனந்தசங்கரியினால் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம்



**மேன்மை தங்கிய மஹிந்த ராஜபக்ஷ,**
**இலங்கை ஜனாதிபதி,**
**அலரிமாளிகை.**

**மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு!**

ஈழப்போரின் இறுதி முடிவு இந்த வாரத்துக்குள் கிடைத்து விடுமெனவும் அடுத்து வரும் 72 மணித்தியாலயங்களும் விடுதலைப்புலி களுக்குக் கஷ்டமான காலமெனவும் பாதுகாப்புப் படையினரால் தெரிவிக்கப்பட்ட கருத்து எனக்குப் பெரும் பீதியை உண்டு பண்ணியுள்ளது. நான் விடு தலைப் புலிகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. எனது சிந்தனையின் முன்னிலையில் நிற்பது எமது நாட்டினதும் நாட்டு மக்களினதும் அக்கறையே.

அண்மையில் வன்னி இராணுவத் தலைமையகத்திற்கு விஜயம் செய்திருந்த இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சரத் பொன்சேகா அவர்கள் வன்னி படை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் இராணுவ அதிகாரிகள் மத்தியில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி முக்கியமானதுடன் யாரும் புறக்கணிக்கத் தக்கதுமல்ல. ``இந்த நிமிடம் தொடக்கம் எமது முன்னேற்றம் மிக்க அவதானமாகவும் பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பில் கூடிய அக்கறையும் கொண்டதாகவும் அமைய வேண்டும். அவர்களுக்கு மிகவும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியதே நமது முன்னுள்ள முக்கிய பொறுப்பாகும்" இவ்வாறு சரத்பொன்சேகா தெரிவித்திருந்தார். பொது மக்களுடன் கலந்து செயற்படும் விடுதலைப்புலிகள் எதற்கும் எதனைச் செய்யவும் தயாராகவுள்ளனர். மிக விரக்தியடைந்த நிலையிலுள்ள அவர்கள் இராணுவத்தினரை தூண்டக் கூடிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தயங்கமாட்டார்கள். ஏதோ ஒரு அரசியல் கட்சியின் எவரை யேனும் திருப்திப்படுத்து வதற்காக யுத்தத்தை விரைவில் முடிக்க முடியாது. ஒவ்வொருவரும் மிக்க அவதானமாகச் செயற்பட வேண்டிய கட்டம் இதுவாகும்.

நான் மிக்க பயத்துடனும் அவதானத்துடனும் சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக்கொள்வது யாதெனில், விடுதலைப் புலிகள் தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவும் வகையில் ***ஜாலியன் வாலா பாக்*** இல் நடந்த சம்பவம் போன்ற ஒன்றை உருவாக்க முயற்சிக்க வேண்டாம் என்பதேயாகும். அவ்வாறு செய்தால் அத்தகைய ஒரு சம்பவத்தை வைத்து சர்வதேச சமூகத் தையும் உலகளாவி வாழும் தமிழர்களையும் தூண்டிவிட ஒரு சந்தர்ப்பத்தை அவர்களுக்கு வழங்கிய தாக முடிந்து விடும். மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்களை தமது தேவைக்காக தடுத்து வைத்து பட்டினி போடும் ஒரு குழு தமது அபிலாஷைகளை நிறைவேற்ற எதனையும் செய்யக்கூடியவர்களாக இருப்பார்கள்.

***ஜாலியான் வாலா பாக்*** சம்பவத்தில் தான் 10 நிமிடங்களில் 1550 துப்பாக்கிரவைகளை உபயோகித்து கதறக்கதற 1516 இந்திய மக்களை பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் சுட்டுத் தள்ளியும் காயப்படுத்தியும் இருந்தனர்.

இந்தச் சம்பவமானது பிரித்தானியரின் இந்திய ஆட்சி வரலாற்றில் ஒரு பெரும் கரும் புள்ளியாகவும் இந்திய மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு திருப்பு முனையாகவும் அமைந்தது. இவ்வாறானதொரு சம்பவம் எமது நாட்டில் நடக்க வேண்டுமென்று நான் விரும்பவில்லை. அப்படி ஏதும் நடந்து விடக் கூடாதென்பதே எனது பிரார்த்தனையாகும். ஒரு சிறிய சம்பவம் கூட அழிந்து போய்க்கொண்டிருக்கும் ஓர் இயக்கத்துக்கு புதுவாழ்வளிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கலாம். கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மொத்தம் ஒரு இலட்சத்து ஐயாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த நான்கு இலட்சத்து இருபதினாயிரம் மக்கள் வாழ்கிறார்கள். விடு தலைப்புலிகள் எத னையும் மிகைப்படுத்திக் கூறு பவர்கள் என்பதால் அந்த எண்ணிக்கையில் எழுபத் தைந்து வீதத்தை மட்டும் எடுத்துக் கொண்டாலும் அங்கு 3 இலட் சத்துக்கு மேற்பட்டவர்கள் வாழ வேண்டும்.

மன்னார், வவுனியாவிலிருந்து இடம் பெயர்ந்த மக்களின் எண்ணிக்கையையும் சேர்த்தால் இத்தொகை மேலும் அதிகரிக்கும். இவற்றில் சுமார் நாற்பதினாயிரம் மக்களே வவுனியா வந்துள்ளனர். ஏற்கனவே வெளியேறியவர்களையும் சேர்த்துக் கணித்தால் 3 இலட்சத்து 30 ஆயிரம் மக்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ளனரென்பது சரியாக இருக்கலாம்.மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மக்களுக்குத் தேவைப்படும் உணவுப் பொருட்கள் ஏறக்குறைய ஐந்து ஆயிரம் தொன் ஆகும். அங்கே வாழும் அநேக மக்கள் மிகப் பட்டினியான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். உண்மையில் அங்கு உணவு, மருந்துப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் அதை நிறைவேற்ற உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் .

கடந்த கால் நூற்றாண்டு காலமாக விடுதலைப் புலிகளுக்கு உணவளித்து வந்தது அரசாங்கமே. அங்கே உள்ள மக்களை அரசாங்கமே காப்பாற்ற வேண்டுமென்பதால் அங்குள்ள மக்களின் தேவைக்கேற்ப அவர்கள் விடுவிக்கப்படும் வரை போதியளவு உணவு மற்றும் மருந்து வகைகள் அனுப்பப்பட வேண்டும்.

மிக பயங்கரமான நிலைமை தவிர்க்கப்படுவதற்கு இராணுவத்தினர் விமானம் மூலம் குண்டு பொழிவதனையும் ஷெல், பீரங்கி மூலம் தாக்குவதனையும் உடன் நிறுத்த வேண்டும். இப்படி ஒரு அவல நிலை ஏற்பட்டுள்ளதென்பதனை ஜனாதிபதி அவர்கள் ஏற்றுக்கொண்டால் உடனடியாக தலையிட்டு இந்த அவல நிலையை நிறுத்த முன்வரவேண்டும்.

வீ. ஆனந்தசங்கரி
தலைவர்- த.வி.கூ.


**தமிழ் மக்களின் பிரச்சினையை துணிச்சலுடன் உலகறியச் செய்த மூத்த அரசியல் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்.**

(சு/5009)

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

X 1

# இலங்கையின் தற்போதைய பாராளுமன்றத் தேர்தல் முறை

உதாரணமாக யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த செல்லுபடியான வாக்குகள் 2 இலட்சத்து 20 ஆயிரம் எனக்கொள்வோம். இவற்றில்,

A கட்சி - 60,500 வாக்குகளையும்
B கட்சி - 48,500 வாக்குகளையும்
C கட்சி - 23,000 வாக்குகளையும்
D கட்சி - 21,000 வாக்குகளையும்
E கட்சி - 10,500 வாக்குகளையும்

ஏனைய கட்சிகள் எல்லாம் தலா 8000 வாக்குகளுக்குக் குறைவாக மொத்தமாக 56, 500 வாக்குகளையும் பெற்றுக் கொண்டன என கொள்வோம்.

மொத்த அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் 1/20 க்குக் குறைவாக வாக்குகளைப் பெற்ற சுயேட்சைக் குழுக்கள் கட்டுப் பணத்தை பெற தகுதியற்றதாகும்.

அத்தோடு மொத்த வாக்குகளில் 1/20க்கு மேல் பெற்ற கட்சிகளது அல்லது சுயேட்சைக் குழுக்களது வாக்குகள் மட்டுமே உறுப்பினர் தெரிவுக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

2இலட்சத்து 20 ஆயிரம் மொத்த வாக்குகளில் 11,000 வாக்குகளே மொத்த வாக்குகளில் 1/20 ஆகும். எனவே 11,000 வாக்குகளுக்கு குறைவாகப் பெற்ற கட்சிகளது, சுயேட்சைக் குழுக்களது வாக்குகள் எண்ணிக்கைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

இதன்படி 60,500 வாக்கை பெற்ற A கட்சியின் வாக்குகளும் 48,500 வாக்கை பெற்ற B கட்சியினதும் 23,000 வாக்கை பெற்ற C கட்சியினதும் 21,000 வாக்குகளைப் பெற்ற D கட்சியுமாக மொத்தம் ஒரு இலட் சத்து 53 ஆயிரம் வாக்குகளே உறுப்பினர் தெரிவுக்கான கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும். யாழ் தேர்தல் மாவட்டத்திற்குரிய 9 உறுப்பினரில் ஒரு உறுப்பினர் மாவட்டத்தில் கூடிய வாக்குகளைப் பெறும் கட்சிக்கு போனஸாக வழங்க ஒதுக்கி வைக்கப்படும். எனவே மேற்குறிப்பிட்ட ஒரு இலட்சத்து 53 ஆயிரம் வாக்குகளை எட்டால் பிரித்து வரும். ஒவ்வொரு முழுத் தொகைக்கும் ஒவ்வொரு உறுப்பினர் வழங்கப்படும். இதன்படி ஒரு இலட்சத்து 53 ஆயிரத்தை 8 ஆல் பிரித்தால் வருவது 19,125 வாக்குகள் ஆகும்.

இதன்படி,

A கட்சி 60,500 ÷ 19,125 = 3 உறுப்பினர் மிகுதி - 3,125 வாக்குகள்
B கட்சி 48,500 ÷ 19,125 = 2 உறுப்பினர் மிகுதி 10,250 வாக்குகள்
C கட்சி 23,000 ÷ 19,125 = 1 உறுப்பினர் மிகுதி 3,875 வாக்குகள்
D கட்சி 21,000 ÷ 19,125 = 1 உறுப்பினர் மிகுதி 1,875 வாக்குகள்
7 உறுப்பினர்

மேற்கூறிய கணக்கின்படி முழுமையாக 19,125 வாக்குகளைப் பெற்று 7 உறுப்பினர் வழங்கப்பட மிகுதி 1 உறுப்பினருக்கு நான்கு கட்சிகளும் தலா மிகுதிய 3,125 வாக்குகளும் 10,250 வாக்குகளும்,3,875 வாக்குகளும், 1,875 வாக்குகளும் பெற்றுள்ளன. ஆனால் உறுப்பினர் தொகைக்கு கணக்கிடாது விடப்பட்ட E கட்சி மேற்கூறி மிகுதிகளை விட கூடுதலான தொகையான 10,500 வாக்குகளைப் பெற்றுள்ளது.

எனவே எட்டாவது உறுப்பினர் E கட்சிக்கே வழங்கப்படும். இவ்வாறு தான் 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 1 உறுப்பினரையும், 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் EPDP ஒரு உறுப்பினரையும் பெற்றுக்கொண்டது.

A கட்சி ஏனைய கட்சிகளை விட கூடுதலான வாக்கைப் பெற்றமையால் 9 ஆவது உறுப்பினரை போனஸாக வழங்கி A கட்சிக்கு மொத்தம் 4 உறுப்பினர் கள் வழங்கப்படுகிறது.

## ஓர் கண்ணோட்டம் 5

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | | 1 | | | | 1 | | | |
| | | | | | 1 | | | | 1 | | | 1 |
| மொத்தம் | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |

***விருப்பு வாக்கு எண்ணும் முறை:***

விருப்பு வாக்கு அளிக்கும் முறை பற்றி முன்னர் கண்டோம். இனி அவ்விருப்பு வாக்குகள் எவ்வாறு எண்ணப்படுகின்றன எனப் பார்ப்போம். இதற்கு உதாரணமாக யாழ்.தேர்தல் மாவட்டத்தை எடுத்துக்கொள்வோம். வாக்கு எண்ணும் அலுவலர்களை சிறுசிறு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு கட்சிக்கும் இடப்பட்ட வாக்குகள் ஒவ்வொரு குழுவிடம் வழங்கப்படும். அத்தோடு 1, 2,3, 4,5,6,7,8,9,10,11,12 என்று இலக்கமிடப்பட்ட கீழ்க்காணும் மாதிரிப் படிவமும் வழங்கப்படும்.

உதாரணமாக உதயசூரியனுக்கு அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் ஒரு குழுவிடம் ; கொடுக்கப்பட்டுள்ளது எனக்கொள்வோம். அவ் வாக்குச் சீட்டுக்களில் முதலாவது சீட்டில் இலக்கம் 1 க்கும் இலக்கம் 5 க்கும் இலக்கம் 9க்கும் புள்ளியிட்டிருந்தால் மேலே காட்டப்பட்ட அட்டவணையில் ஒன்றுக்கு கீழே 1ம் ஐந்திற்கு கீழே 1ம் ஒன்பதிற்கு கீழே 1ம் இட வேண்டும்.

அடுத்த வாக்குச் சீட்டில் இலக்கம் 5க்கும் இலக்கம் 9க்கும் இலக்கம் 12க்கும் புள்ளியிடப்பட்டால் மேலே காட்டப்பட்ட அட்டவணையில் இலக்கம் 5 க்கு கீழே 1ம் இலக்கம் 9 க்கு கீழே 1ம் இலக்கம் 12க்கு கீழே 1ம் இட்டுக் கொள்ளப்படும்.இவ்வாறு தொடர்ந்து எல்லா வாக்குச் சீட்டுக்களின் விருப்பு வாக்குகளாக இடப்பட்டு கீழே மொத்தம் காட்டப்படும்.



இவ்வாறு மொத்தம் காட்டப்பட்ட பின்னர் எந்த இலக்கத்திற்கு கூடுதலான விருப்பு வாக்கு பெற்றவரோ அவர்தான் முதலாவது உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவார். அக்கட்சிக்கு மூன்று உறுப்பினருக்கு தகுதி உண்டெனில் முதல் கூடுதலாகப் பெற்ற மூவரும் அக்கட்சியின் அல்லது சுயேட்சை குழுவின் பாராளுமன்ற உறுப்பினர் என தேர்தல் ஆணையாளரினால் அறிவிக்கப்படுவார்.

இம் மூவரில் யாராவது ஒருவர் இறந்தால் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வேண்டாம் என்றால் அடுத்த கூடுதல் விருப்புரிமை பெற்றவர் பாராளுமன்ற உறுப்பினராக தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்படுவர்.

செ.மகாலிங்கம் B.A(Hons)M.A
முன்னாள் திட்டப்பணிப்பாளர்,
திட்டமிடல் பணிப்பாளர்,
யாழ்.செயலகம்.

விருப்பு வாக்குகள் பெற்றவர்கள் நியமிக்கப்பட்டு மற்றவர்களுக்கு விருப்பு வாக்கு இல்லையெனில் கட்சிகளால் அல் லது சுயேட்சைக் குழுவால் வழங்கப்படும் முன்னுரிமை பட்டியலின் படியே உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள். (முற்றும்)

# பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி கோரினால் மறுக்க போவதில்லை

## மைத்திரிபால சிறிசேன

இம்முறை பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரினால் அதனை தாம் மறுக்கப் போவதில்லை என விவசாய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கட்சித் தலைமைப் பீடம் எடுக்கும் எந்தவொரு தீர்மானத்திற்கும் தாம் கட்டுப்பட்டுச் செயற்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மஹாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் தெரிவிக்கும் போது,

2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிவுகள் ஐக்கிய மக்கள் சுதந்திக் கூட்டமைப்பிற்கு சார்பாக வெளியாகிக் கொண்டிருக்கும் தருணத்தில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா விசேட ஹெலிகொப்டர் ஒன்றை அனுப்பி தம்மை அலரிமாளிகைக்கு அழைத்து பிரதமர் பதவி குறித்து பேச்சு வார்த்தை நடத்தினார்.

அப்போது லக்ஸ்மன் கதிர்காமர், அனுர பண்டாரநாயக்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரது பெயர்களை சந்திரிகா தெரிவு செய்திருந்ததாக தாம் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு பிரதமர் பதவி பொருத்தமானதென பரிந்துரை செய்ததாகவும் தெரிவித்துள்ளார்.

மஹிந்த சிந்தனையை ஏற்றுக் கொள்ளும் எந்தவொரு தரப்பினரும் ஆளும் கட்சியில் இணைந்துகொள்ள முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# மொரட்டுவை தொழில்நுட்பக் கல்லூரியின் மாணவ குழுக்கள் மோதல்; 7 பேர் காயம்

(கொழும்பு)

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தேசிய டிப்ளோமா தொழில்நுட்பக் கல்லூரியில் இரு மாணவ குழுக்களுக்கிடையிலான மோதல் இடம்பெற்றுள்ளது.

முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு இடையில் நேற்று மாலை இடம்பெற்ற இம் மோதலில் ஏழு பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்தார்.

இதில் ஈடுபட்ட மாணவர்கள் பகிடி வதைக்கு எதிரானவர்கள், ஆதாரவானவர்கள் என இரு குழுக்களாக பிரிந்திருந்தனர் என்றும் கூறப்படுகின்றது. (2-6)

# நாட்டின் அபிவிருத்தியின் பெறுபேற்றை முடிந்தளவு மக்களுக்கு பெற்றுக் கொடுத்துள்ளோம் - ஜனாதிபதி

அபிவிருத்தியை நாம் அடிக்கல்லோடு மட்டும் மட்டுப்படுத்தவில்லை. நாட்டின் அபிவிருத்தியின் பெறுபேற்றை முடிந்தளவு மக்களுக்கு பெற்றுக்கொடுத்துள்ளோம். மக்களுக்கு உணவு வழங்குவதற்காக கடன் வாங்க வேண்டிய தேவையில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த யுகங்களில் புனரமைப்புக்களும் புதிய அபிவிருத்தித் திட்டங்களும் மறக்கப்பட்டிருந்தன. அவர்கள் நாட்டின் விவசாயத்தில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. வெளிநாடுகளிலிருந்து உணவைக் கொண்டு வருவது இலாபம் என்று சில அரசாங்கங்கள் நினைத்திருந்தன என்றும் அவர் சொன்னார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கெக்கரியோட குளத்தின் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்ததன் பின்னர் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கோதுமை மாவிற்கு பெற்றிருந்த கடனை இன்னும் செலுத்திக் கொண்டிருக்கின்றோம். எமது மக்களுக்கு தேவையான உணவை வழங்குவதற்கு கடன் வாங்க வேண்டியதில்லை. கடன்வாங்கவும் மாட்டோம். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கே நாம் கடன்பெற்றுள்ளோம். மக்களுக்கு தேவையான உணவைப் பெற்றுக்கொடுப்பதற்கான பொறுப்பை எமது விவசாயிகளிடம் ஒப்படைத்தோம். அதற்கான வசதிவாய்ப்புக்களை விவசாயிகளிடம் ஏற்படுத்திக் கொடுத்தோம்.



அபிவிருத்திக்காக பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம். உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தினோம் நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் சிலருக்குப் புரிந்துணர்வு இல்லை. மக்களுக்குத் தேவையான அபிவிருத்தியை பெற்றுக்கொடுத்துள்ளோம். மாவட்ட ரீதியில் அபிவிருத்திகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.மக்களின் கனவுகள் இன்று மலர்ந்துள்ளன.

ஜனாதிபதி தேர்தலில் என்னை அதிகூடிய வாக்குகளினால் வெற்றியீட்ட வைத்தீர்கள். அதேபோல நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். உங்களின் பிள்ளைகளுக்காக நல்ல நாட்டை கட்டியெழுப்புவதற்கு எம்முடன் கரம்கோர்ப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது.

நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் சகல மக்களும் எதிர்பார்த்திருந்த ஒளிமயமான எதிர்காலம் விரைவில் மலரும். அபிவிருத்திக்கு தடையாக இருந்த யுத்தம் நிறைவடைந்துள்ளது. நாட்டை அபிவிருத்தி செய்வதே அரசாங்கத்தின் பிரதான இலக்காகும் என்றார். (2-6)

# கனடாவின்
## புகலிடம் வழங்கும் சட்டத் திருத்தத்தினால் இலங்கை, இந்தியா, பாகிஸ்தானியர்கள் பாதிப்பு

புகலிடம் வழங்கும் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள கனேடிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புகலிடம் வழங்கும் சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் பட்சத்தில் இலங்கை, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து தஞ்சம் கோருவோருக்கு பாதிப்பு ஏற்படும் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

தற்போது கனடாவில் அமுலிலுள்ள குடிவரவு, குடியகல்வு மற்றும் புகலிடம் வழங்கும் சட்டங்களில் பல்வேறு சிக்கல்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குடிவரவு, குடியகல்வு மற்றும் புகலிடம் வழங்குவதில் கனடா மிகவும் நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய அணுகுமுறையையே தற்போது பின்பற்றி வருகிறது.

புகலிடம் வழங்குவோருக்கு அடைக்கலாம் வழங்குவதில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மிக முக்கிய பங்கை கனடா வகிக்கிறது. அத்துடன் போலியான முறையில் புகலிடம் கோருவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கும் வண்ணமே இந்த புதிய சட்டம் அமுலாக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

போலியான முறையில் பலர் அடைக்கலம் கோருவதாகவும் அவ்வாறானவர்களை தடுத்து நிறுத்துவதற்காகவே இவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்த எண்ணியுள்ளதுடன் நியாயமான கோரிக்கைகளுடன் புகலிடம் கோருவோருக்கு அடைக்கலம் வழங்கவும் புதிய சட்டத்தில் இடம் உள்ள வகையில் தயாரிக்கப்படவுள்ளதாக கனேடிய அரசு குறிப்பிட்டுள்ளது. (ஓ-6)

# கண்ணிவெடிகள் அகற்றும் பணியில் 1100 இராணுவ பொறியியலாளர்கள்
## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை தமது சொந்த இடங்களில் வெகுவிரைவில் மீளக் குடியமர்த்துவதற்காக கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளை இராணுவத்தினர் துரிதமாக மேற்கொண்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

கண்ணிவெடிகளை அகற்றும் துறையில் நிபுணத்துவம் பெற்ற 1100 இராணுவப் பொறியியலாளர்களும் 7 அரச சார்பற்ற நிறுவனங்களும் இதில் ஈடுபட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் ஏ-32 வீதியின் இரண்டு பக்கமும் காரைநகர் ஜெற்றி வரையும் ஏ-9 வீதியின் இரண்டு பக்கமும் ஆனையிறவு வரையான பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சியில் ஆனையிறவு முதல் ஓமந்தை வரையான ஏ-9 வீதியின் இரு பக்கமும் ஏ-35 வீதியின் இருபக்கமும், பி-69 வீதியின் இருபக்கமும் அகற்றப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவின் ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள 25 கிராமங்கள் கண்ணிவெடி அகற்றுவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் தற்போது முல்லைத்தீவின் ஒன்பது கிராமசேவகர் பிரிவுகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் மாந்தை மேற்கின் 15 கிராம சேவகர் பிரிவுகள், மாந்தை கிழக்கின் 13 கிராமசேவகர் பிரிவுகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட வருகின்றன. இந்தப் பகுதியிலுள்ள 18 கிராம சேவகர் பிரிவுகளில் அகற்றும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் சேமமடு கிராமசேவகர் பிரிவில் அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார். (ஓ-6)

# யாழ், மட்டக்களப்பு மாவட்டங்களில்
## ஜனநாயகதேசிய முன்னணி பெண் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது

(கொழும்பு)

ஜெனரல் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக தேசிய முன்னணி யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பெண் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது என அக்கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சமன்மலீ குணசிங்ஹ தெரிவித்தார்.

நேற்று இலங்கை தனியார் தொலைக்காட்சியில் இடம்பெற்ற பெண் வேட்பாளர்களின் அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இதனைக் கூறினார்.

யாழ். மாவட்டத்தில் நான்கு பெண் வேட்பாளர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு பெண் வேட்பாளரும் போட்டியிடுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஓ-6)


**மாபெரும் மலிவு விற்பனை**

**சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு...**

**01.04.2010 - 10.04.2010 வரை**

உயர்தரமான இறக்குமதி செய்யப்பட்ட தரை ஓடுகள் (Tiles), சுவர் ஓடுகள் மற்றும் அனைத்து விதமான குளியலறை சாதனங்கள் அனைத்தையும் **40% விலைக் கழிவுடன்** பொருட்களைப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரேஇடம்,

**TPS சர்வதேச தனியார் நிறுவனம்,**
**மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.**

T.P.:0775702253, 0777578277

(991)



# உதவித் தொகைகள் வழங்கும் பெருவிழா



காலம் : -03.04.2010 சனிக்கிழமை பி.ப 1.00 மணிக்கு
இடம்:- சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க முன்றலில்

**கௌரவ சமூக சேவைகள் அமைச்சர் அவர்களால் வழங்கப்படவுள்ள உதவிகளின் விபரங்கள்**

- 600 பீடித் தொழிலாளர்களுக்கு உதவு தொகைகள் வழங்கப்படும்.
- நூற்று இருபத்து ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் 274 பயனாளிகளுக்கு வழங்கல்.
- வடக்கின் வசந்தம் வங்கிக் கடன் பத்திரங்கள் வழங்கல்

**பங்குபற்றுவோர்**

- பிரதேச செயலர் திருமதி ஏழிலரசி அன்ரன் யோகநாயகம், வலி தென்மேற்கு, சண்டிலிப்பாய்.
- திரு.கே.தர்மலிங்கம், உதவிப்பணிப்பாளர், கடற்றொழில் நீரியல் வளத்துறை, யாழ்ப்பாணம்.
- திரு. ஆர். இரவீந்திரன், கடற்றொழில் பரிசோதகர், வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய்.
- திரு .வி.கே.தனபால, கிராம சேவையாளர், ஜே/131 சாவல்கட்டு, ஜே/137 மானிப்பாய் வடக்கு.
- திருமதி.யோ. பற்குணராசா, முதல்வர், யாழ். மாநகர சபை.
- திருமதி பு. சிவலிங்கம். செயலாளர், வலி. தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.
- சில்வேஸ்திரி அலென்ரின், யாழ். மாவட்ட அமைப்பாளர் (அகில இலங்கை சமாதான நீதவான்)
- பசுபதி சீவரட்ணம் (ஜீவா), E.P.D.P தேசிய அமைப்பாளர்.
- சந்திரகுமார் முருகேசு
- வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், வலி .தென் மேற்கு பிரதேச சபை முன்னாள் முதல்வர்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

வரவேற்பாளர்கள்:-

- சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம்
- சாவல்கட்டு கிராம முன்னேற்ற சங்கம்
- சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலையம்
- சாவல்கட்டு முதியோர் சங்கம்
- சாவல்கட்டு துணை இழந்தோர் சங்கம்
- சாவல்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகம்
- சகல ஆலயங்களின் நிர்வாக சபை உறுப்பினர்கள்.

(999)

# காத்திரமான அரசியல் தீர்வை வென்றெடுக்க தமிழ்மக்கள் அனைவரும் ஓரணி திரள வேண்டும்

## த.தே.வி.கூ.முதன்மை வேட்பாளர்ஸ்ரீகாந்தா



எந்த இலட்சியத்தை முன்வைத்து எமது மக்கள் கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு மாபெரும் ஆதரவை அளித்தார்களோ அந்த மக்களின் புனிதமான நம்பிக்கைக்கு கூட்டமைப்பின் தலைமை துரோகம் இழைத்து விட்டது. இந்திய அரசாங்கத்தின் கைப்பொம்மைகளாக மாறிய இந்த அரசியல் தலைவர்கள் நடந்து முடிந்த போருக்கு மறைமுக ஆதரவு வழங்கியுள்ளனர். இவ்வாறு அச்சுவேலி தம்பாலையில் நடைபெற்ற தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அதன் தலைவரும் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளருமான சட்டத்தரணி ந.சிறீகாந்தா குற்றஞ்சாட்டினார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்ட சோனியாகாந்தி தலைமையிலான இந்திய அரசாங்கம் அந்தரங்கமாக விரும்பியது. இதற்கு ராஜீவ்காந்தி படுகொலை மட்டும் காரணமல்ல. அதற்கும் மேலாக இலங்கையில் ஆயுதப் போராட்டமாக எழுச்சி பெற்று நின்ற தமிழ்த் தேசிய வாதத்தை தோற்கடித்தால் மாத்திரமே, இந்தியாவின் தமிழ் நாடு மாநிலத்தை இந்திய நாட்டுடன் தொடர்ந்து வைத்திருக்க முடியும் என்று இந்திய அரசாங்கம் தீர்மானித்தது. போரில் இலங்கை அரசுக்கு சகல வழிகளிலும் அது உதவியது. அதே நேரத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமை இந்திய அரசுக்கு அனுசரணையாக நடந்து கொண்டது. போர் நிறுத்தத்தை கொண்டு வந்திருக்கக் கூடிய வாய்ப்புக்களை எல்லாம் வேண்டுமென்றே தவற விட்டது.

அண்ணன் எப்போது சாவான்- திண்ணை எப்போது காலியாகும்? என்ற துர்நோக்கத் துடன் கூட்டமைப்புத் தலைமை இந்திய அரசாங்கத்துடன் ஒத்துழைத்ததே வன்னியில் நிகழ்ந்த பாரிய மனித அவலத்திற்கு வழிகோலியது.

இந்திய வெளியுறவுச் செயலாளர் திருமதி. நிருபமா ராவ் சமீபத்தில் கொழும்புக்கு வந்து அரசாங்கத்தோடும் தமிழ்த் தேசிய கூட்டமைப்போடும் பேச்சுவார்த்தை நடத்தினார். தேர்தல் முடிந்ததும் ஓர் அரை குறையான அரசியல் தீர்வை தமிழ் மக்கள் மீது திணிக்க இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் கூட்டாக திட்டமிடுகின்றன. நிருபமா ராவுடன் தாம் பேசியது என்ன என்பதை தமிழ் மக்களுக்கு சொல்ல கூட்டமைப்பின் தலைமை தயாரா?

திரைமறைவில், இந்திய அரசாங்கத்தின் ஏஜென்டுகளாக செயற்படும் கூட்டமைப்பின் தலைமை தொடர்ந்து தமிழ் மக்களுக்கு துரோகம் இழைக்கின்றது. சர்வதேச ஆதர வைத் திரட்டி ,இந்திய – இலங்கை கூட்டுச் சதியை முறியடித்து, காத்திரமான அரசியல் தீர்வை வென்றெடுக்க தமிழ் மக்கள் ஓரணிதிரள வேண்டும்.

இந்திய அரசாங்கத்தின் எடுபிடிகளான ஒரு சிலர் புதிய வேட்பாளர்களாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளனர். இதை விட ஐக்கிய தேசியக் கட்சியுடனும் அரசாங்கத்துடனும் ஒரே நேரத்தில் நெருக்கமான உறவை கொண்டிருந்த பணமுதலை ஒருவருக்கும் வேட்பாளர் நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு இவையெல்லாம் எடுத்துக் காட்டுக்கள் ஆகும்.

வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் அரசியல் சோரம் போன கட்சிகளையும் துரோகம் இழைத்த தலைமைகளையும் தூக்கி வீச தமிழ் மக்கள் துணிச்சலோடு முன்வர வேண்டும் என்றார். (2)




# குடாநாட்டு மக்கள் வரலாற்று தவறிழைக்காது சிந்தித்து வாக்களிக்க வேண்டியது அவசியம்

## ஐ.தே.க. வேட்பாளர் ஸ்ரீகஜன் வலியுறுத்தல்



இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்கள் தமது சொந்த இடங்களுக்கு சென்று வாக்களிக்க உரிய போக்குவரத்து வசதி களை தேர்தல் திணைக்களம் மேற்கொள்ள வேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிக்க உரிய பஸ்வசதிகள் மேற்கொள்ளப்பட வில்லை.

இத்தகைய நடைமுறை இனிமேலும் பின்பற்றப்படக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாழ். மாவட்ட வேட்பாளரும் ஊடகவியலாளருமான எஸ். ஸ்ரீகஜன் தெரிவித்தார்.

சித்தங்கேணியில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ் வாறு கூறினார். இங்குஅவர்மேலும்தெரிவித்ததாவது,

குடாநாட்டு மக்கள் உட்பட தமிழ் மக்களுக்காக அமரர் மகேஸ்வரன் ஆற்றிய பணிகள் அளப்பரியன. அவரது வழியிலேயே எனது சேவை தொடரவுள்ளது. குடாநாட்டு மக்கள் பலவருடங்களாக அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர். கடத்தல், காணாமல் போதல் வகை தொகை யற்ற கைதுகள் என்பனவற்றினால் குடா நாட்டு மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்தனர். தற்போதும் இந்த நிலை தொடர்வது வேதனைக்குரிய விடயமாகும்.

இத்தகைய அச்சுறுத்தல் நிலை மாற வேண்டுமானால் ஆட்சி மாற்றம் அவசியமாகும். குடாநாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்துக்கான ஆணையினை வழங்க வேண்டும். இல்லையேல் இத்தகைய நிலை தொடர்கதையாகவே அமையும்.

இந்த அரசாங்கத்தின் காலத்தில் கடத்தப்பட்டவர்கள், காணாமல் போனவர்களின் நிலை பெரும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. அவர்களின் நிலையறியாது பெற்றோர், உறவினர்கள் நாள்தோறும் கண்ணீர் விட்டு வருகின்றனர். எனவே கடத்தப்பட்டவர்கள், காணாமல் போனவர்களின் நிலை குறித்து அறிய எமது ஆட்சியில் ஆணைக்குழு அமைக் கப்படும் என்றார். (ந)

# நிர்க்கதியான நிலையிலுள்ள வன்னி மக்களின் துன்ப, துயரங்கள் களையப்படல் வேண்டும்

## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் கந்தசாமி திருலோகமூர்த்தி உரை



கிளிநொச்சி மாவட்ட மக்கள் இன்று மிகவும் நிர்க்கதியான நிலையில் முகாம்களிலும் மீள்குடியேற்றப் பகுதிகளிலும் முடங்கிக் கிடக்கின்றனர் என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் டாக்டர் கந்தசாமி திருலோகமூர்த்தி குறிப்பிட்டார்.

மட்டுவில் கிழக்கில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், வன்னி யுத்தத்தில் காணாமல் போன இளைஞர், யுவதிகளின் நிலை என்ன? இவர்கள் எங்கிருக்கின்றார்கள்? என்று தெரியாது பெற்றோரும் உறவினரும் துயரத்தில் மூழ்கியுள்ளனர்.


இவ் யுத்தத்தில் மரணித்த மக்கள் தொகை வெகுவாக அதிகரித்துள்ளது. இக் குடும்பத்தினர் எவ்வித உதவியும் அற்ற நிலையில் குடும்ப உழைப்பாளிகள், உறுப்பினர்களை இழந்து விரக்தி நிலையிலே வாழ்கின்றனர்.

பொது மக்களின் காணிகள் மீள ஒப்படைக்கப்படவில்லை. ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், ஏனைய தொழில்துறை சார்ந்தோரும் விவசாயிகளும் பாதிப்படைந்துள்ளனர்.

பாடசாலைகள் பெரும் சேதத்தை தழுவியதையடுத்து மாணவர்கள் கல்வியை தொடர முடியாத அவலநிலையில் உள்ளனர். வன்னி பல்கலைக்கழக மாணவர்கள் கல்வியை தொடர நிதி வளமோ ஏனைய உதவிகளோ அற்ற நிலையில் உள்ளனர். ஆலயங்கள் அழிவடைந்து விட்டன.

இதற்கெல்லாம் சரியான முறையில் நிரந்தரமான தீர்வு கிடைக்க ஆவனசெய்ய வேண்டும் என்றார். (2)

# 1400 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உலகம் தோன்றியது எப்படி?



## விஞ்ஞானிகளின் ஆய்வில் வெற்றி


(ஜெனிவா)

உலகம் எப்படி தோன்றியது? அதில் உயிர்கள் எப்படி உருவாயின? என்பதை விஞ்ஞானிகளால் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. வானத்தில் அணுகுண்டுகளை விட பல இலட்சம் மடங்கு சக்தி வாய்ந்த ஏதோ இரு பொருட்கள் பயங்கரமாக மோதியிருக்க வேண்டும்.

அதில் ஏற்பட்ட மாற்றத்தில் தான் உலகம் உருவாகி இருக்கும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். இந்த மோதல் சுமார் 1400 கோடி ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் கருதுகின்றனர்.

உலகில் உள்ள ஒவ்வொரு பொருட்களுமே அணுக்களால் ஆனவை. ஒவ்வொரு அணுவும் மற்றொரு அணுவை ஏற்றுக் கொண்டு பொருட்களாக காட்சி அளிக்கின்றன. ஒரு அணு மற்றொரு அணுவுடன் ஒட்டிக் கொள்ள பசைபோன்ற ஏதோ ஒரு மர்ம பொருள் உதவுகிறது.

அந்த மர்ம பொருள் எது? அது எப்படி உருவாகிறது என்பதை கண்டு பிடித்து விட்டால் உலகம் தோன்றியதையும், உயிர்கள் தோன்றியதையும் கண்டு பிடித்து விடலாம்.




இதற்கான ஆராய்ச்சியில் சர்வதேச விஞ்ஞானிகள் ஒன்று சேர்ந்து ஈடுபட்டனர். இதைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் 1400 கோடி ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது போல ஒரு மோதலை செயற்கையாக உருவாக்கி ஆய்வு நடத்துவது என்று முடிவு செய்தனர்.

இதற்காக அணு பொருளான புரோத்தன் கதிர்களை மோதவிட்டு சோதனை செய்வது என்று திட்டமிட்டனர். புரோத்தன் கதிர்களை மோத செய்தால் அது சக்தி வாய்ந்த 2 அணு குண்டுகளை மோதவிடும் போது ஏற்படுவது போன்ற சக்தி வெளிப்படும். அப்போது அந்த மர்ம பொருளை கண்டு பிடித்து விடலாம் என கருதினார்கள்.

இந்த சோதனையை நடத்துவதற்காக பிரான்ஸ் - சுவிட்சர்லாந்து நாட்டு எல்லை பகுதியில் பூமிக்கு அடியில் 100 மீற்றர் ஆழமான இடத்தில் 27 கிலோ மீற்றர் நீளத்துக்கு வட்ட வடிவில் சுரங்கப்பாதை அமைத்தனர்.

அதில் இரு முனையில் இருந்து புரோத்தன் கதிர்களை எதிர் எதிரே அனுப்பி மோத செய்வதற்கான கருவிகளையும் அமைத்தனர்.

இதன் பணிகள் அனைத்தும் முடிந்து 2008 ஆம் ஆண்டு இதன் சோதனையை தொடங்கினார்கள். அப்போது இரு முனைகளில் இருந்து புரோத்தன்களை அனுப்பி 2.36 டிரில்லியன் எலக்ட்ரான் வோல்ட் வேகத்தில் மோத செய்தனர்.

நேற்று முன்தினம் அதை விட 3 மடங்கு வேகத்தில் 7 டிரில்லியன் எலக்ட்ரோன் வோல்ட் அளவில் புரோத்தன்களை மோத செய்தனர். பூமிக்கு அடியில் இவ்வளவு அதிக சக்தி கொண்ட பொருட்களை மோதவிட்டு இருப்பது இதுவே முதல் முறையாகும். இந்த சோதனை வெற்றி கரமாக அமைந்தது.

விஞ்ஞானிகள் எதிர்பார்த்த படியே மோதல் நடந்து பெரும் வெடிப்பு நிகழ்ந்தது. அப்போது நிகழ்ந்த மாற்றங்களை 2 ஆயிரம் விஞ்ஞானிகள் கம்ப்யூட்டர் உதவியுடன் ஆய்வு செய்தனர். நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சோதனை முழு வெற்றி அடைந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இன்னும் பல்வேறு கட்ட சோதனைகள் நடக்கவுள்ளன. அதன் பிறகே முழுமையான ஆய்வு முடிபுகள் தெரியவரும். (6)

# பதுளையிலிருந்து கதிர்காமம் வரை புதிய ரயில் பாதை அமைக்கப்படும்

## ஜனாதிபதி அறிவிப்பு



(கொழும்பு)

பதுளை தொடக்கம் பிபிலை - வெள்ளவாய ஊடாக கதிர்காமம் வரையும் புதிய ரயில் பாதை அமைக்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை மெதகெட்டியவில் தெரிவித்தார்.

பதுளையிலிருந்து கதிர்காமத்திற்கு அமைக்கப்படும் புதிய ரயில் பாதை மாத்தறையிலிருந்து கதிர்காமத்திற்கு அமைக்கப்படும் ரயில் பாதையுடன் இணைக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தங்கல்ல, மெதகெட்டியவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் 18 இலட்சம் மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்று இரண்டாவது தடவையாகவும் நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட பங்களிப்புச் செய்த சகலருக்கும் எனது நன்றிகளை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நுரைச்சோலை, மேல்கொத்மலை,கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி திட்டங்களைப் போன்று குக்குலே கங்கை மின்னுற்பத்தித் திட்டமும் ஆரம்பிக்கப்படும். அம்பாந்தோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய பிரதேசமாகும்.

இதனை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது எமது பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி தனது உரையில் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# பிரித்தானியாவில் அடைக்கலம் கோருவோரில் இலங்கையர் நான்காம் இடத்தில்

(கொழும்பு)

பிரித்தானியாவில் அடைக்கலம் கோருவோரில் இலங்கையர்கள் நான்காம் இடத்தை வகிப்பதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இதனடிப்படையில் கடந்த 2009 ஆம் ஆண்டு ஆயிரத்து 430 இலங்கையர்கள் பிரித்தானியாவில் அடைக்கலம் கோரியுள்ளனர்.

இந்த தொகை முன்னைய வருடங்களை காட்டிலும் குறைவானது என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சிம்பாவே நாட்டினர், பிரித்தானியாவில் அடைக்கலம் கோருவோர் பட்டியலில் முதலிடத்தை வகிக்கின்றனர். 2009 ஆம் ஆண்டில் பிரித்தானியாவில் அடைக்கலம் கோரிய சிம்பாவே நாட்டவர்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 420 ஆகும்.

இதற்கு அடுத்தபடியாக ஆப்கானிஸ்தானில் இருந்து கடந்த வருடத்தில் 3 ஆயிரத்து 520 பேர் பிரித்தானியாவில் அடைக்கலம் கோரியிருந்தனர். (ஓ-6)

## வாக்களிப்பின் பொருட்டு

# அனைத்து ஊழியர்களுக்கும் போதுமான விடுமுறை வழங்க வேண்டும் - தேர்தல்கள் ஆணையாளர்

பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில், அனைத்து ஊழியர்களுக்கும் சம்பந்தப்பட்ட தொழில் வழங்குநர்கள் போதுமானளவு விடுமுறை வழங்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க விஷேட சுற்றறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளார்.

வாக்களிக்கத் தகுதியுள்ள ஊழியர்கள் இந்த விடு முறைக்காக எழுத்துமூலம் விண்ணப்பிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள ஆணையாளர், விடுமுறை வழங்கப்படும் ஊழியர்களின் பெயர்கள் குறிப்பிட்ட நிறுவனத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஏப்ரல் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ள ஊழியர்கள் அதன் பொருட்டு விடுமுறை வழங்குமாறு எழுத்து மூலமாக ஊழியர் ஒருவர் கோருவாராயின் தொழில் தருனர்கள் போதுமான காலத்திற்கு அவர்களுக்கு விடுமுறை வழங்குதல் அவசியம்.

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 122 ஆம் பிரிவிற்கிணங்க வழங்கப்படும் இந்த விஷேட விடுமுறை 4 மணித்தியாலங்களுக்கு குறையாததாகவும் சம்பளத்துடனானதாகவும் அமைய வேண்டும்.

இவ்வாறு விடுமுறை வழங்கப்படும் ஊழியர்களின் பெயர், அவர்களுக்கு வழங்கப்படும் பட்டியல் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 122 (1) பிரிவின்படி எல்லோருக்கும் தெரியும் வகையில் நிறுவனத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

வாக்களிப்பின் பொருட்டு ஊழியர்களால் கோரப்படும் விடுமுறையை வழங்காதிருப்பது நீதிமன்றமொன்றில் வழக்குத் தொடர்ந்து தண்டனை பெற்றுக் கொடுக்கக்கூடிய குற்றமாகும். (ஓ-6)

# இணக்கப்பாட்டை மீறி சக்தி, சிரச ஊடகங்களில் விளம்பரங்கள்

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு



(கொழும்பு)

சக்தி, சிரச ஊடக வலையமைப்பின் எந்த நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதில்லை எனவும் அந்த ஊடக நிறுவனத்திற்கு கூட்டமைப்பின் தேர்தல் பிரசார விளம்பரங்களை வழங்குவதில்லை எனவும் ஜனாதிபதி தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இணக்கப்பாட்டுடனான தீர்மானத்தை அமைச்சர் சம்பிக்க ரணவக்க உள்ளிட்டோர் மீறியிருப்பதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குற்றஞ் சுமத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக தமது எதிர்ப்பைத் தெரிவித்து, கூட்டமைப்பின் தலைவர்கள் இணக்கத்தை மீறியுள்ளனர் என்ற தலைப்பில் செய்தியொன்றை விமல் வீரவன்ச தனது இணையதளத்தில் வெளியிட்டுள்ளார்.

எகோன் என்ற பாடகரை வரவழைக்க தலையீடு செய்ததாகக்கூறி சிரச ஊடக நிறுவனம் மீது தாக்குதல் நடத்த பௌத்த பிக்குகளை வழி நடத்திய அமைச்சர் ஒருவர் சிரச தொலைக்காட்சிக்கு அவரது தேர்தல் பிரசார விளம்பரத்தை வழங்கியுள்ளமை நேர்மையானதா என அந்த இணையத் தளத்தில் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இம்முறை பொதுத்தேர்தல் தொடர்பாக சிரச நிறுவனத்தில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில்லை எனவும் அந்த நிறுவனத்திற்கு கூட்டமைப்பின் விளம்பரங்களை வழங்குவதில்லை எனவும் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் குறித்த இணையத்தள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிரச ஊடகத்திற்கு எவ்வித விளம்பரங்களையும் வழங்காது கூட்டமைப்பின் வேட்பாளர்கள் மேற்கொண்ட இந்த இணக்கத்தை முழுமையாகக் கடைப்பிடித்தனர் .

எனினும் விருப்பு வாக்குப் போட்டி உக்கிரமடைந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் கூட்டமைப்பின் முக்கிய அமைச்சர்கள் உள்ளிட்ட வேட்பாளர்கள் சிலர் சிரச ஊடகத்திற்கு தேர்தல் பிரசார விளம்பரங்களை வழங்கியுள்ளனர்.


அமைச்சரவை அமைச்சர்களான சரத் அமுனுகம, சம்பிக்க ரணவக்க ,ரோஹித்த அபேகுணவர்த்தன மாத்திரமல்லாது கிரிக்கெட் வீரர் சனத் ஜெயசூரியவின் தேர்தல் பிரசாரங்களும் சிரச தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# நீர்ச்சூழலில் உயிர்ப்படல உருவாக்கமும் அவற்றின் பாதிப்பும்

நுண்ணங்கிகள் நீர்ச்சூழலில் பெரும் பங்கு வகிக்கின்றன. குறிப்பாக போசனைப் பொருட்களின் சுழற்சி, உற்பத்தி, பிரிகையாக்கல் முதலிய செயற்பாட்டிலும், நீர் அங்கிகளின் உணவாகவும், நீரின் தரம், சுகாதார முகாமைத்துவத்தை பேணுவதற்கும் பயன்படுகின்றன. இதன் விளைவாக நீர்ச்சூழலில் நுண்ணங்கிகளின் உருவாக்கம் ஆனது முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

நீரில் அமிழ்ந்துள்ள எந்த ஒரு மேற்பரப்பின் மீதும் பக்றீறியாவால் உருவாக்கப்பட்ட சேதன பல்படையினுள் (organic polymer matrix) அமிழ்ந்துள்ள நுண்ணங்கிகளாலான ஓர் கூட்டம் / சேர்க்கை உயிர்ப்படலம் எனப்படும்.



இப்படலமானது பல்வேறுபட்ட அங்கிகளாலான(hereroge neous) சூழல் தொகுதியை கொண்டது. இவை காற்றுள்ள – காற்றற்ற சுவாசத்திற்கு உரியவை. அதேபோல இத்துடன் இவை வளரும் இனத்தை பெருக்கும் அத்துடன் மேலதிக கலத்திற்குரியபல பகுதியங்களை உருவாக்குகின்றன. இவை கலத்திலிருந்து நீட்டப்பட்டு காணப்படும். இவ்வாற உருவாக்கப்படும் சிக்கலான மூலக்கூற்று நார்கள் இச்சேர்வைக்கு (bofitm) வடிவத்தை கொடுக் கின்றன.

ஓர் புதிய மேற்பரப்பில் அங்கிக் கூட்டங்கள் (colony) குடியேறும் செயல்முறையானது 4 அவத்தைகளைக் கொண்டது. அவை யாவன,

- Biochemical conditioning
- bacterial colonization
- unicellular colonization
- multicellular eukaryotic fouling

பக்றீறியாக்கள் அடித்தளப்படையுடன் ஒட்டிக் கொள்வதனால் condition film உருவாவதே உயிர்ப்படல உருவாக்கத்தின் முதல்படி நிலை ஆகும். இப்படை நீரில் இருந்து பெரிய சேதன மூலகங்களையும் சிறிய மூலக் கூறுகளையும் அகத்துறிஞ்சுகின்றன. இது மேற்பரப்புடன் பக்றீறியாக்கள் இணைவதற்கு தேவையான பௌதீகச் சூழலை வழங்குகின்றது.

சில மணித்தியாலங்களில் பக்றீறியாக்கள் திண்ம மேற்பரப்பின் மேல் மேலதிக கலத்துக்குரிய பல்பகுதியங்களை (Extra cellular polymers) உருவாக்குகின்றன. பின்பு புரோக்கரியோட்டாக்களின் அழுக்காக்கல் (fouling) நிகழும். அதாவது பக்றீறியா, தயற்றங்கள் முதலியன இரண்டாம் நாள் முதல் இணையத் தொடங்குகின்றன.

இதைத் தொடர்ந்து குடம்பிகள், அல்காக்கள், 8 ponges முதலியனவும் |Isopocls Barnacles, Amphipods, Decapods, mollusc, Annelid, Coelenterate முதலிய பெரிய மூலக்கூறுகளின் மாசாக்கம் (macro fouling) இடம்பெறும். இவ்வாறு உறுதியான உயிர்ப் படலம் உருவாக்கப்படுகின்றது.

இவ்வாறு நுண்ணங்கிகள் நீர்ச்சூழலிலுள்ள புதிய மேற்பரப்புடன் ஒட்டிக் கொள்ளும் செயற்பாடு மிகவும் சிக்கலானது. இது உயிருள்ள, உயிரற்ற காரணிகளில் தங்கியுள் ளது.

உயிரற்ற காரணிகளான அடித்தளப்படையின் நிறம், மேற்பரப்பின் கட்டமைப்பு, மேற்பரப்பின் ஈரலிப்பு, நீரின் போசனை அளவு, மேற்பரப் பின் ஏற்றம் pH, வெப்ப நிலை, இரசாயன பதார்த்தம் முதலி யன தாக்கத்தை ஏற்படுத்தும்.

குழப்பப்படாத நீர், கரடு முரடான மேற் பரப்பு, அதிக புரத, காபோவைதரேற்று கொண்ட மண்வகைகள், நடுநிலையான அல்லது சிறிது அமில ஊடகம் என்பன உயிர்ப் படலத்தை அதிகரிக் கின்றன.

இதனை விட நீர்ச்சூழலில் உள்ள சிறிய நுணுக்குக்காட்டிக்குரிய அங்கிகள் முதல் பெரிய அங்கிகளும் அவற்றிடையே உள்ள இடைத்தொடர்புகளான ஒன்றிய வாழ்வு, இரை கௌவி, ஒறொட்டில் உண்ணல் என்பனவும் உயிர்ப்படலத்தை அதிகரிக்கின்ற உயிர்க் காரணிகள் ஆகும்.

### உயிர்ப்படலத்தின் நன்மைகள்

உயிர்ப்படலம் ஆனது வளர்ப்பு அங்கிகளுக்கு உணவாகப் பயன்படுகின்றது. உ+ம் :- திலாப்பியா, பாலைமீன், மணலை, carp முதலியவற்றிற்கு உணவாக விளங்குகின்றன.

உயிர்ப்படலத்தில் கல அடர்த்தி அதிகமாக இருப்பதனால் நீர் வளர்ப்பில் அதிக விளைச்சலை குறைந்த பரப்பளவில் பெற முடிகின்றது. இங்கு பரம்பரை பதார்த்த பரிமாற்றம் அதிகமாக காணப்படுகின்றது. எனவே போசணைப் பதார்த்தங்கள் தொடர்ச்சியாக ஈடு செய்யப்படும்.

அண்மைய ஆய்வுகளின் படி விவசாய பக்கவிளை பொருட்களான வைக்கோல், கரும்பின் சக்கை முதலியவற்றையும் நீர்த் தாவரங்களையும் நீர் நிலைகளில் இடுவதன் மூலம் குறைந்த செலவில் அதிகரித்த உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடிதல் என கண்டறியப்பட்டுள்ளது.

நீர் நிலைகளில் நீரின் தரத்தை பேணுவதில் உயிர்ப்படலம் பெரிதும் பயன்படுகின்றது. அதாவது மாசுக்கள் சுத்திகரிக்கும் தொகுதியில் சேதன, அசேதன மாசாக்கிகளை (Organic and inorganic Pollutants) அகற்றுகின்றன.


உயிர்ப்படலத்தில் உள்ள Nitrosomonas, Nitrobacter முதலிய பக்றீறியாக்கள், நைதரசன் கழிவு பொருட்களின் அனுசேபத்திலும் நச்சுப் பொருட்களை எளிய போசணைப் பொருட்களாகவும், நச்சுத்தன்மையற்ற சேர்வைகளாகவும் மாற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

உயிர்ப்படலத்தில் உள்ள எதிர் ஏற்றமுடைய சேதன பல்படை, சேதன மூலகங் களை பிடித்து வைப்பதிலும் மிகச் சிறிய துணிக்கைகளை (Particles) கலக்கச் செய்வதிலும் முக்கியத்துவமானவை.

உயிர்ப்படலமானது மீன்களிற்கு நிர்ப்பீடன (Vaccin) வழங்கும் செயற்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றன. உதாரணமாக வெப்பத்திற்கு எதிர்ப்பு தன்மையுள்ள Aeromonas hydrophila எனம் உயிர்ப்படல கலங்கள் ஊடாக Indian major carps நிர்ப்பீடனப்படுத்தப்படுகின்றன.

மருந்து தயாரிக்கும் தொழில்களிலும் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் உயிர்ப்படலத்தின் தாக்கிகள் நொதித்தல் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

நீர்ச்சூழல் தொகுதியில் bioremediatian, bioaugumentation, bio degradation முதலிய



செயற்பாடுகளை சிறந்த முறையில் கையாளுவதற்கும் உதவுகின்றன.

எவ்வாறெனினும் பல நன்மைகளை கொண்டுள்ள உயிர்ப்படலமானது சில தீமையையும் ஏற்படுத்த தவறியதில்லை.

உயிர்ப்படலத்தின் முக்கிய பாதகவிளைவு உயிர் அழுக்காக்கல் (biofouling) ஆகும். உயிர் மாசாக்கம் / அழுக்காக்கல் என்பது நீரில் அமிழந்துள்ள எந்த ஒரு மேற்பரப்பின் மீதும் மாசாக்கல் அங்கிகள் இணைந்து கொள்ளும் செயற்பாடு ஆகும்.

இதனைவிட உயிர்ப்படலமானது நீர்க் குழாய்களிலும் கப்பலின் அடிப்பகுதியிலும் நீர் உராய்வுத்தடையை அதிகரிக்கின்றன. இதனால் கப்பலின் வேகத்தை குறைக்கின்றது. தரையிலுள்ள சக்தி பிறப்பாக்கிகளின் ஒடுக்கியில் வெப்ப மாற்றத்தை குறைக்கின்றன. இதனால் அதிக அளவான எரிபொருட்கள் உள்ளெடுக்கப்படுகின்றது.

உயிர்ப்படல சேர்வைகள் உலோகமேற்பரப்புக்களில் அரிப்பை தூண்டுவதுடன் மரக் கட்டமைப்புக்களை உக்கச் செய்கின்றன. உள் மேற்பரப்பில் உள்ள உயிர்ப்படலம் நீர்க் குழாய்களில் பாய்ச்சல் வீதத்தை குறைக்கின் றது. உதாரணமாக உயிர்ப்படல தடிப்பு 0.1% குழாயின் விட்டம் ஆகும் போதே பாய்ச்சல் வீதம் 50% ஆல் குறைக்கப்படுகின்றது.

Sonar domes, off shore plat forms, coastal power station, sub merged marine sensor முதலியவற்றில் உள்ள மெல்லிய உயிர்ப்படல படிவுகள் அவற்றின் வீரியத்தை குறைக்கின்றன. சில நோய் ஏற்படுத்தும் பக்றீறியாவை கொண்ட உயிர்ப்படலம் நீர் வளர்ப்பு அங்கிகளுக்கு நோயை ஏற்படுத்துகின்றது.

முட்டை மேற்பரப்பில் உருவாக்கப்படும் உயிர்ப்படலமானது முட்டை பொரித்தல் குறைப்பதுடன் பண்ணைகளில் அதிக இறப்பையும் ஏற்படுத்துகின்றன.

உயிர்ப்படலத்தில் உள்ள அங்கிகள் அனுசேப பொருட்களையும் கழிவு பொருட்களையும் வெளியேற்றுவதுடன் நீரின் திண்ம அளவைக் கூட்டி துர்நாற்றத்தை ஏற்படுத்துவதுடன் நற்போசணை நிலையையும் ஏற்படுத்துகின்றன.

எவ்வாறெனினும் உயிர் மாசாக்கலை கட்டுப்படுத்துவதன் மூலம் பாதக விளைவுகளை தவிர்த்துக் கொள்ள முடியும். எனினும் மேற்பரப்பிலுள்ள உயிர்ப்படலத்தை வழமையான தொற்று நீக்கிகள், துப்பரவாக்கல் செயல்முறைகளில் மூலம் வினைத்திறவாக செயற்படுத்த முடியாதுள்ளது. ஏனெனில் உயிர்ப்படலத்தின் மேல் பாதுகாப்பு Glyco calyx coating எனப்படும் ஓர் படலம் இருப்பதே ஆகும். இது உயிர்க்கொல்லிகள் (bio-cide), கிருமிகொல்லிகளுக்கு (disinfectant) எதிர்ப்பு தன்மையை காட்டுகின்றன.

ஆனால் சில செயல்முறைகள் உயிர்ப் படலத்தை வினைத்திறனாக கட்டுப்படுத்துகின்றன.

1. நீரில் அமிழ்ந்துள்ள எந்த ஒரு பொருளையும் குறித்த காலத்திற்கு ஒரு தடவை கிருமி கொல்லிகளை பயன்படுத்தி சூரிய உலர்த்தல் செய்தல்.

2. Chlorinated alkaline எனும் தொற்று நீக்கி (detergent) ஐ பயன்படுத்தி சுயாதீன கலங்களை அகற்றுதல் அதன் பின் கிருமி கொல்லி (disinfectant) ஐ பாவித்து உயிர்ப் படலத்தை கட்டுப்படுத்தல்.

3. இதைவிட மேற்பரப்பை குறித்த இடைவெளியில் உரோஞ்சிச் சுத்தப்படுத்தல் (manual method) உதாரணமாக நீர்வளர்ப்பு பண்ணைகளில் உள்ள பாத்திரங்கள், உபகரணங்களை கழுவுவதனால் அவற்றின் வாழ்நாள் கூட்டப்படுகின்றது.

4. குறித்த காலத்திற்கு ஓர் தடவை Anti-fouling பூச்சு பூசுதல்.

இவை எல்லாவற் றை விட மிகவும் சிறந்த தெரிவாக அமைவது பிளாந்தன்களையும் குடம்பிகளையும் உணவாக கொள்ளும் நீரில் வளர்ப்பு அங்கிகள் (Predatory organism) ஐ வளர்ப்பதன் மூலம் மாசாக்கலைக் குறைப்பதுடன் மனித உணவுத் தேவைகளையும் ஈடுசெய்ய முடிதல்.

எனினும் தற்போது விஞ்ஞான வளர்ச்சியிலும் அவற்றின் கண்டுபிடிப்புகளாலும் உயிர்ப்படலத்தின் முக்கியத்துவமும் அவற்றின் பிரயோகங்களும் கண்டறியப்பட்டுள்ளன. இவை வேறுபட்ட துறைகளான மருத்துவம், தொழில்நுட்பம் போன்றவற்றில் மிகவும் அடிப்படையாக இருக்கின்றன.

எனவே இதைச் சிறந்த முறையில் கையாளுவதன் மூலம் வருமானத்தை ஈட்டும் தொழிலாக மாற்றுவதுடன் வேலையில்லா பிரச்சினையை தீர்த்துக் கொள்ளும் துறையாகவும் மாற்றி அமைக்க முடியும்.

Miss. Tharmine Nadarajah
உதவி விரிவுரையாளர்,
விலங்கியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 18

நுளம்புக் குடம்பிக் கட்டுப்பாட்டில் விசிறப்படம் குடம்பி நாசினியில் உள்ள நுண்ணங்கியின் விஞ்ஞானப் பெயர் யாது?

விடைகளை 14-04-2010 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

Mr. V. Sendil
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Physics,
University of Jaffna, Jaffna.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மீன்பிடியியல் துறையில் கலாநிதி சி. குகநாதனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

புதிர் 16க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி
அ. மேர்சி தர்ஷிக்கா
சில்லாலை தெற்கு
பண்டத்தரிப்பு

புதிர் 17 இற்கான விடை : **Insulin**

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
### புதிர் இல. 18

சரியான விடை :......................................
முழுப்பெயர் :......................................
முகவரி :......................................
:......................................
கையொப்பம் :......................................

# சிலுவையில் மறைந்தார் சித்தமெல்லாம் நிறைந்தார்

உலகமெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் இயேசுவின் சிலுவை மரணத்தை புனித வெள்ளியாக 'குட் பிரைடே' என அனுஷ்டித்து வருகின்றனர். இயேசுவின் பிறப்பு முதல் உயிர்த்தெழுதல் வரை தெளிவாக பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பைபிளில் விளக்கப்பட்டுள்ளது.

கடவுளின் செயலை இன்றுவரை எந்த மனிதனாலும் மாற்றி அமைக்க முடியாது என்பதே உண்மை. தனது சாயலால் முதல்


## இன்று புனித வெள்ளி

மனிதன் ஆதாமைப் படைத்தார். கீழ்ப்படியாமை மூலம் பலவித பாவங்களுக்கு ஆளான மனுகுலத்தை மீண்டும் மீட்க தன்னையே பலியாக ஒப்புக்கொடுக்க திட்டம் கொண்டார்.

ஆதிமுதல் பாவத்திற்கு நிவாரண பலியாக விலங்கு, பறவைகளின் இரத்தமே தேவைப்பட்டது. ஆனாலும் பாவம் போக்க வழியில்லாததால், கடவுளே தம்மையே சிலுவை மரணம் மூலம் பாவ நிவாரணப் பலியானார்.

ஆதாமிலிருந்து நான்காயிரம் ஆண்டுகளுக்கு பின்பு கி.பி. முதலாமாண்டில் இயேசு பிறந்து கி.பி. 34 இல் தனது முப்பத்து மூன்றரை வயதில் சிலுவை மரணத்தின் மூலம் இரத்தத்தை சிந்த முடிவெடுத்தார். தனது 30 ஆவது வயதில் 12 சீடர்களுடன் கடவுளின் ராஜ்யத்தை பற்றிய செய்தியையும் இந்த உலகத்துக்கு வரும் முடிவையும் குறித்து சகல பட்டணங்களுக்கும் சென்று அறிவித்தார்.

அவர் செய்த அற்புதங்களை, பிரசங்கங்கள் உட்பட அனைத்து நடவடிக்கைகள் மீது யூத மத குருக்களும், ஆசாரியர்களும் பொறாமையும் கோபமும் கொண்டனர். நாளுக்கு நாள் ஜெருசலேமிலும், கலிலேயா, சமாரியா, யூதேயா முழுவதிலும் மக்கள் மத்தியில் அவருக்கு செல்வாக்கு பரவி யதால் அவரை நெருங்கவோ, தண்டிக்கவோ முடியவில்லை.



எனவே இயேசுவின் 12 சீடர்களுள் ஒருவனான யூதாசை பயன்படுத்தி இரகசியமாக அவரை பிடிக்க வகை தேடினார்கள். அவர்களது வலையில் யூதாஸ் பண ஆசைக்காக விழுந்தான். ஒலிவமலை அருகே ஜெஸ்தமனித் தோட்டத்தில் இயேசு இருந்த போது ரோம போர் சேவர்களுடன் வந்து இயேசுவை முத்தமிட்டு காட்டிக் கொடுத்தான்.

இயேசுவை மட்டும் பிடித்துச் சென்ற வீரர்கள் ரோமப் பேரரசின் தேசாதிபதி, ஆசாரியர்கள் முன்பு அவரை நிறுத்தி, பொய்க்குற்றம் சுமத்தி, இரவு முழுவதும் அடித்து துன்புறுத்தினார்கள். மறுநாள் காலையிலும் தொடர் சித்திரவதை செய்தனர்.

இறுதியில் சொந்த ஜனங்களும், மத குருக்களும் இயேசுவை சிலுவையில் அறைந்து கொல்ல வேண்டும் என தேசாதிபதி பிலாத்துவிடம் வற்புறுத்தினர். பிலாத்து விடுதலை செய்ய மனதிருந்தாலும் மத குருமார்களின் கட்டாயத்தின் பேரில் இயேசுவை அவர்களிடம் ஒப்படைத்ததும், சிலுவையில் இயேசுவுடன் இரு கள்ளர்களையும் அறைந்தனர்.

சிலுவையில் கூறிய ஏழு வார்த்தைகள் "*கடவுளே, இவர்களை மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்*", தன்னிடம் அன்பு செலுத்திய கள்ளனிடம், "*நீ இன்றைக்கு என்னுடன் பரதீசிலிருப்பாய்*", தனது தாயை நோக்கி, "*ஸ்திரியே! அதோ உன் மகன்*", அருகிலுள்ள சீடரை நோக்கி "*அதோ உன் தாய்*", "*என் தேவனே, என்தேவனே ஏன் என்னை கைவிட்டீர்*", பைபிள் வார்த்தை நிறைவேற்றத்தக்கதாக "*தாகமாயிருக்கிறேன்*" என்று கூறி, "*முடிந்தது*" என்றார். "*பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்*" என்று மகா சத்தமாய் கூப்பிட்டு ஜீவனை விட்டார்.

உலகில் பிறக்கும் மனிதன் வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறான். ஆனால் இயேசு மட்டும் மரிப்பதற்கென்றே பிறந்தார். பிறந்தால் தானே மரிக்க முடியும். இரத்தம் சிந்தி மரித்தால் தானே மனு குலப்பாவத்தை மீட்க முடியும். பிசாசின் கிரியைகளை அழிக்க முடியும் என்ற திட்டத்துடன் பூமியில் இறங்கிவந்து, மனிதரோடு, மனிதராக, சரித்திர நாயகராக சாதித்து காட்டினார். இன்றும், நானே சத்தியம், வழி, ஜீவன் என்று வாழ்ந்து வருகிறார். (ஓ)

## திருகோணமலையில் கண்ணிவெடி மீட்பு

(கொழும்பு)

திருகோணமலையிலுள்ள கிண்ணியா பிரதேசத்தில் சக்தி வாய்ந்த கண்ணிவெடியொன்று நேற்று முன்தினம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்ணிவெடி 14 1/2 கிலோகிராம் நிறையைக் கொண்டது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே இது மீட்கப்பட்டது. (2-6)

## இலங்கையர் இருவருக்கு குவைத்தில் மரணதண்டனை

(கொழும்பு)

குவைத்தில் வசித்து வந்த இலங்கைத் தம்பதியருக்கு அந்நாட்டு குற்றத் தடுப்பு நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு அவர்கள் பணிபுரிந்த வீட்டின் உரிமையாளரைக் கொலை செய்துவிட்டு தலைமறைவானமை தொடர்பாகவே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வீட்டு உரிமையாளரின் உடமைகளையும் பணத்தையும் அபகரித்துக் கொள்ளும் நோக்கில் அவரைத் தூக்கிலிட்டுக் கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-14)

## புகைப்படம் எடுக்க அனுமதியில்லை

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் வாக்காளர்கள், குறிப்பாக முக்கியஸ்தர்கள் வாக்களிக்கும் போது, அவர்களை புகைப்படம் பிடிப்பதை அனுமதிப்பதில்லை என்று தேர்தல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

வாக்காளர்கள் வாக்களிக்கும் போது, அவர்களை புகைப்படம் எடுக்கக்கூடாது என்று ஏற்கனவே தேர்தல் விதிகளில் தெரிவிக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

## நலன்புரி முகாமில் வழங்கப்பட்ட ஆவணத்தை வாக்களிக்க பயன்படுத்தலாம்

### தேர்தல் திணைக்களம்

(கொழும்பு)

வவுனியா நலன்புரி முகாமொன்றில் தங்கியிருந்த மக்கள் அங்கு வழங்கப்பட்ட ஆளடையாள ஆவணத்தை வாக்களிப்பு நிலையத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பயன்படுத்த முடியும் என்று தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.


இது தொடர்பாக திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாராளுமன்றத் தேர்தலின் போது வாக்காளரொருவர் வாக்கெடுப்பு நிலையத்தில் அவரது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக சமர்ப்பிக்க வேண்டிய ஆளடையாள ஆவணங்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

அவ்வாறான ஆளடையாள ஆவணமொன்று இல்லாத வவுனியா நலன்புரி முகாமொன்றில் தற்காலிகமாக வசித்த வாக்காளர்கள், முகாம்களிலிருந்த போது பொலிஸ் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாள ஆவணத்தை வாக்களிப்பு நிலையத்தில் சமர்ப்பிக்கலாம்.

அத்துடன் வாக்கெடுப்பு நிலையங்களில் அவை ஏற்றுக் கொள்ளப்படும். (2-6)

## நாட்டின் அபிவிருத்திப் பணிகளை தொடர வலுவான பாராளுமன்றம் அவசியம்



### கோத்தபாய ராஜபக்ஷ

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்திப் பணிகளை தொடர்வதற்கு வலுவான ஓர் பாராளுமன்றம் அவசியமானதென பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் எவ்வித தடைகளும் இன்றி தொடர்வதற்கு பலமான பாராளுமன்றத்தின் தேவை விஞ்சி நிற்பதாகவும் பலவீனமான பாராளுமன்றமொன்றின் மூலம் அபிவிருத்தி இலக்குகளை எட்ட முடியாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

மஹறா அம்பலாங்கொட நகரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்சித் தாவல்களை அனுமதிக்க வேண்டிய சூழ்நிலை காணப்பட்டதாகவும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு தாவுவதனை தடுத்திருந்தால் பயங்கரவாதத்தை இல்லாதொழித்திருக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)



நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப்பாடசாலையின் 9 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் நாளும் அண்மையில் இடம்பெற்ற போது பாடசாலை அதிபர் நீர்வைமணி கு. தியாகராஜக் குருக்கள் தலைமையுரையாற்றுவதையும் பாடசாலை ஆசிரியை செ. சிவாஜினி வரவேற்புரையாற்றுவதையும் வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் த. நடராஜா, கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் த. கோபாலகிருஷ்ணன், இந்து கலாசார திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் வி. மகிந்தினி ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# 'எம் உயிரை காப்பாற்றுங்கள்' இது வன்னி மக்களின் அவலக் குரல்

## 02.05.2009 அன்று வீ.ஆனந்தசங்கரியினால் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம்



வன்னியில் எஞ்சியுள்ள இடம்பெயர்ந்த மக்களை காப்பாற்றுங்கள் என 01.05.2009 இல் என்னால் தங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக மேலும் அறியத்தருவது யாதெனில், கனரக ஆயுதங்களை உபயோகிக்க கூடாதெனவும், துப்பாக்கியால் ஒரு பொது மகனுடைய உயிர் தன்னும் பறிக்க அனுமதிக்கக் கூடாதெனவும் தாங்கள் இராணுவத்தினருக்கு கொடுத்துள்ள அறிவுரை பாராட்டுக்குரியதாகும். இலங்கை இராணுவத்தினர் தற்போது மிகவும் கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஓர் அமைப்பாகும். போரிடுபவர்களாக அவர்கள் ஏன்?, எதற்காக? என்ற கேள்வியை எழுப்பாது கட்டளைக்கேற்ப செயற்பட்டு மரணிக்கவேண்டியவர்களே. மறுபுறம் அவர்கள் காயப்பட்டவர்களுக்கும் பலம் குன்றியவர்களுக்கும் மனிதாபிமான சேவைகளை செய்யும் வேறு பணியிலும் ஈடுபட்டுள்ளனர். ஐந்து வயது பிள்ளை ஒன்றை காணாது தவித்த ஓர் தாயின் பிள்ளையைத் தேடி கண்டுபிடித்து அப் பிள்ளை அணிந்திருந்த அத்தனை நகைகளுடனும் அதன் தாயிடம் சேர்த்த, ஓர் நல்ல போர்வீரன்னை காண்கிறோம். பெருமளவில் வெளியேறிய மக்களின் துயர் துடைத்தபோதே அவர்கள் மக்களின் நல்லெணத்தைப் பெற்றார்கள். அவர்களில் பெண்கள், குழந்தைகளையும் , நோயாளிகளையும், முதியோர்களையும் அக்கறையுடனும் மிக்க அன்புடனும் அனுசரித்து நடந்துள்ளனர். அவர்களின் பலதரப்பட்ட செயற்பாடுகளும் மிகவும் பாராட்டப்பட வேண்டியவையாகும்.

விடுதலைப்புலிகள் அரச படையினர் போன்று கட்டுப்பாட்டுடன் செயற்படுபவர்கள் அல்ல என்பதை நீங்களும் ஒத்துக்கொள்வீர்கள். அவர்கள் யுத்த விதிமுறைகளுக்கு அமைவாக நடப்பார்கள் என நாம் எதிர்பார்க்க முடியாது .இப்பிரதேசம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருப்பதாலும் பொதுமக்களுடன் அவர்கள் பெருமளவில் கலந்து செயற்பட பெரும் வாய்ப்பிருப்பதாலும் பொதுமக்களை பெருமளவில் பாதிக்காது விடுதலைப் புலிகளை இராணுவத்தால் தாக்கமுடியாது. இன்றைய நிலையில் விடுதலைப்புலிகளை தாக்குவார்களேயானால் பெருமளவு பொது மக்கள் இறக்கவும், காயமடைவதற்கும் பெரும்வாய்ப்புண்டு. 27.04.2009 தொடக்கம் 01.05.2009 மாலை 4 மணிவரை 170 அப்பாவிகள் கொல்லப்பட்டும் 951 பேர் காயமடைந்தும் உள்ளனர். அவர்களில் 181 பேர் சிறுபிள்ளைகளாவர். ஒவ்வொரு தினமும் பாதிப்படைந்தவர்களின் எண்ணிக்கை விபரம் என்னிடம் உண்டு. இந்த எண்ணிக்கை ஆஸ்பத்திரிக்கு அனுமதி பெற்று இறந்த, காயமடைந்தவர்கள் சம்பந்தமானதே. வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முன்பு இறந்தவர்களின் எண்ணிக்கை இதில் அடங்காது. அத்தகையவர்கள் துவாயினால் சுற்றப்பட்டு புதைக்கப்படுகின்றனர்.

ஜனாதிபதி அவர்களே! இக் கொலைகளுக்கு யார் பொறுப்பாளிகள் என்பதல்ல பிரச்சினை. தாங்கள் விரும்புவது போல் துப்பாக்கியால் யாரும் உயிர் துறக்கக் கூடாது. மிகச் சிறிய அளவு பாதிப்போடு போரைநடத்தியவர்கள் என எடுத்த நற்பெயரை அவர்களே தமக்கு அபகீர்த்தி ஏற்படுத்த அனுமதிக்கக்கூடாது. விடுதலைப்புலிகளின் பிரதேசத்தில் அகப்பட்டுள்ள அப்பாவி மக்களை வெளியில் பாதுகாப்பாக கொண்டு வர வேண்டுமானால் தங்களுக்குள்ள ஒரே வழி ஐக்கிய நாடுகள் சபையை பிரதி நிதித்துவப்படுத்தும் ஒரு ஸ்தாபனம். உள்ளே சென்று விடுதலைப்புலிகளோடு பேசி மக்களைப் பாதுகாப்பாக வெளியேறவும், அவர்கள் தமது ஆயுதங்ளுடன் அரச படைகளிடம் சரணடைய சம்மதிக்க வைப்பதுமே. மக்களின் குறைகளை எடுத்துக்கூற வேண்டிய கடமை எனக்கும், ஓர் உயிர் தன்னும் இழக்கப்படக்கூடாது, மக்களை பாதுகாப்பாக வெளியில் கொண்டு வர வேண்டியது உங்களின் கடமையாகும்.

*பி.கு –*

நான் இக்கடிதத்தை எழுதிக் கொண்டிருக்கும் வேளை இன்று பகல் 12.00 மணிக்கு வந்த நம்பத்தகுந்த செய்திகளின் படி 07 செல்கள் காலை 9.00 மணிக்கும் 10.30 மணிக்கும் இடையில் தாக்குதலுக்கு உள்ளான முள்ளிவாய்க்கால் வைத்தியசாலையில் 64பேர் உயிரிழந்தும் மூன்று ஊழியர்கள் உட்பட 87 பேர் காயமடைந்தும் உள்ளனர். தயவு செய்து உடனடியாக , இலங்கை பிரஜைகள் என்ற காரணத்தால் இத்தகைய ஆபத்துக்களையெல்லாம் எதிர்கொண்டு தவிக்கும் அப்பாவி மக்களை வெளியில் கொண்டு வர வேண்டிய ஏற்பாடுகளை செய்யவும்,வெசாக் வாரமாகிய இவ்வாரம் இத்தகைய சம்பவங்கள் சர்வதேச சமூகத்துக்கு எம் நாட்டை பிழையாக பிரதிபலித்துக் காட்டும்.

வீ. ஆனந்தசங்கரி
தலைவர்- த.வி.கூ

(சி/5011)

தமிழ் மக்களின் பிரச்சினையை
துணிச்சலுடன் உலகறியச் செய்த
மூத்த அரசியல் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு
உங்கள் வாக்கை அளியுங்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி

X 1

## சட்டவிரோத வானொலி அலைவரிசைகள் தொடர்பில் ஸ்ரீ.ல.மு.கா முறைப்பாடு

(கொழும்பு)

தேர்தல் பிரசார . நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் சில ஆளும் கட்சி அரசியல் தலைவர்கள் வானொலி அலைவரிசைகளை நடத்தி வருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சி, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறான வானொலி ஒலிபரப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சட்டவிரோத செயற்பாடு குறித்து இலங்கைத் தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணையகத்திடமும் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக வானொலி ஒலிபரப்புச் சேவை ஒன்றை ஆளும் கட்சி முக்கியஸ்தர் ஆரம்பித்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டவிரோத செயற்பாடு குறித்து மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ-6)

## கருத்தரங்கு

யாழ். முகாமைத்துவ சம்மேளனம் நடத்தும் கருத்தரங்கு தொடரில் *மூலதனச் சந்தையில் முதலீடு* என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 5 மணிவரை பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்துள்ள ஈரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நாமல் அசெற்மனேஜ்மன்ற் லிமிடெட்டின் தலைமை நிறைவேற்று அதிகாரி எஸ். ஜெயவர்மா குறித்த விடயம் பற்றி கருத்துரை வழங்கவுள்ளார். (ஓ-4)

## சக்தி ரீ.வி. தாக்குதலில் கைதானோர் விடுதலை - நீதிமன்றம் கண்டனம்

கொழும்பில் அமைந்துள்ள சக்தி தொலைக்காட்சி த[illegible]கத்தின் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 16 பேரையும் பிணையில் விடுதலை செய்தமைக்காக பொலிஸாரை நேற்று கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் கண்டித்துள்ளது.

எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சந்தேக நபர்கள் 16 பேரிடமும், கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி இனந் தெரியாத குழுவினர் சக்தி தொலைக்காட்சி தலைமையகத்தின் மீது தாக்குதல் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)


பாராளுமன்றத் தேர்தல்-2010

இலங்கைத் தமிழரசுக் கட்சி

தமிழ் தேசியக் கூட்டமைப்பு



சீ.வீ.கே.சிவஞானம்

(முன்னாள் யாழ்.மாநகரசபை ஆணையாளர், பட்டயச் செயலாளர்)

11

♦ திரு . சிவஞானம் அவர்கள் இந்த மண்ணையும் மக்களையும் நன்கு நேசித்து வருபவர். அதனாலன்றோ பல மக்கள் நலன்காக்கும் சமூக அமைப்புக்களில் முக்கிய பதவிகளை வகித்து அளப்பரிய சேவையாற்றி வருபவரென்பதை யாவரும் அறிவீர்கள்.

♦ யாழ். மாநகரசபையில் நீண்டகாலம் ஆணையாளராகவும் விசேட ஆணையாளராகவும் திறம்பட சேவையாற்றி மாநகரசபையின் வளர்ச்சிக்கு வித்திட்ட காரணத்தினால் உள்ளூராட்சி அமைச்சினால் அதி சிறந்த 'நிர்வாக சேவையாளர்' என்ற விருது வழங்கப்பட்டது.

♦ உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதியர்களுக்கு அவர்களின் கொடுப்பனவில் நீண்ட காலமாக நிலவி வந்த பல குறைபாடுகளை ஓய்வூதியத் திணைக்களத்துடன் தொடர்ச்சியாக தொடர்பு கொண்டு அவற்றைத் தீர்த்து வைத்தமை மிகவும் போற்றுதற்குரியது. மேலும் 2006 ஆம் ஆண்டில் இருந்து அரச ஊழியர்களிற்கு அமுல்படுத்தப்பட்ட சம்பளத்திட்டத்திற்கமைவாக ஓய்வூதியர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவும் மாற்றியமைக்கப்பட வேண்டுமென கோரிக்கை விட்ட வண்ணமுள்ளார்

♦ திரு. சிவஞானம் அவர்கள் செயற்திறன் மிக்க வீரர். நிலை தளம்பா கொள்கையுடையவர். மண்ணையும் மக்களையும் மனதார நேசிப்பவர். எங்கெங்கு மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றதோ அவ்வப் போது அரசாங்கத்திற்கு சரியான காரணங்காட்டி எதிர்ப்புத் தெரிவிப்பதில் தயங்கமாட்டார். இத்தகைய திறமைசாலியொருவருக்கு எமது வாக்குகளைச் செலுத்தி பாராளுமன்றம் செல்ல வகை செய்வது எமது கடமையாகும். ஆகவே கூட்டமைக்குரிய வீட்டுச் சின்னத்திற்கு நேரே புள்ளடியிட்டும் விருப்பு வாக்கை அவரது பதினொராம் இலக்கத்திற்கு மேலே புள்ளடியிட்டு அவரை வெற்றி பெறச் செய்வது எமது கடமையாகும்.

உள்ளூராட்சி ஓய்வூதியர் சங்கம்

(சி-5006)


## இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம்

### அம்பாந்தோட்டையில் நிர்மாணம்

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மாத்தறை பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் செயற்படவுள்ளது.

இதனது கட்டுமானப் பணிகள் 2 ஆயிரம் ஹெக்ரர் நிலப்பரப்பில் 200 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதன் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

இவ்விமான நிலையமானது நாட்டினது உள்ளூர் விமானப் போக்குவரத்துக்கு ஒரு கொடையாக அமையும் என்றும் இதன் உருவாக்கம் தென் மாகாணத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கு வழி செய்வதோடு அனைத்துலக வர்த்தகத்தினையும் ஊக்குவிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (6)

## உணவு விசமாகியதால் 100 பேர் வைத்தியசாலையில்

மஹியங்கனை உணவு விடுதியொன்றில் நேற்று முன்தினம் மாலை உணவு உட்கொண்ட 100 பேர் உணவு விஷமடைந்ததால் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் சுகாதார அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-6)

## பத்திரிகையாளர்களுடனான கலந்துரையாடல்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக பத்திரிகையாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் பொ. குகநாதன் தெரிவித்துள்ளார். (2-30)


வடமராட்சி மண்ணின் மைந்தன்
தமிழ்ப் பிரதேசத்தின் முன்னவன்



எஸ். எக்ஸ். குலநாயகம்

அதிதீவிர, தீவிர, ஜனநாயக அரசியல் வழிமுறைகளில் புடம் போட்டு எடுக்கப்பெற்ற

இலங்கைத் தமிழரசுக் கட்சியின்

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

இன்றைய முன்னவன், எங்கள் மூத்தவன். எங்கள் வாக்கு

எஸ். எக்ஸ். குலநாயகம் அவர்களுக்கே.

வடமராட்சி வாக்காளர்கள்


இலங்கைத் தமிழரசுக் கட்சி

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

எஸ். எக்ஸ். குலநாயகம்

12







கொமர்ஷல் வங்கியின் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் நடைபெற்ற தரம் 5 மாணவர்களுக்கான "அருணலு" புலமைப்பரிசில் கௌரவிப்பு விழாவில் வங்கிமுகாமையாளர் ஏ.எம்.ஏ.குபேரகுலேந்திரன், வங்கி ஊழியர் எஸ்.கங்காதரன், இடைக்காடு மகாவித்தியாலய அதிபர் ஏ.அருந்தவநேசன் ஆகியோர் உரையாற்றுவதையும், வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- டுசாந்தன்)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீகநிகழ்வு தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிபூசை முடிவுற்றதும் 'மகாபாரதம்' என்னும் விடயம் பற்றி பொ.சுகந்தன் தொடர் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ-4-35)

✠✠✠

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச்சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிர சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பகல் 10.30 மணிக்கு திருப்புகழ் இசைசயை இணுவில் இளம் தொண்டர் சபையின் ஸ்தாபகர் மா.ந. பரமேஸ்வரன் வழங்கவுள்ளார். (ஓ-35)

## ஆன்மீக ஒன்றுகூடலும் சாதுசங்கமும்

(யாழ்ப்பாணம்)

தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியின் ஆன்மீக ஒன்றுகூடலும் சாதுசங்கமும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பஜனை மற்றும் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தாஜி மகராஜின் "குரு தேவரைச் சரணடைவோம்" என்னும் விடயம் பற்றிய விசேட ஆன்மீக உரையும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(வேலணை)

தீவக வலய கல்வி வலயத்திற்குட்பட்ட சகல பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்த கலந்துரையாடல் எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு தீவக வலயக் கல்விப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

எனவே சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு தீவக வலயக்கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது. (ஓ-4-22)

# வேலணையில் குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்குமாறு மக்கள் கோரிக்கை

வேலணைப் பகுதியில் குடிநீருக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. இங்கு வசிக்கும் குடிசனங்களில் சுமார் 85% வீதமானோர் சாட்டியிலிருந்து குழாய் மூலம் (வங்களாவடி சந்தியிலுள்ள நீர் தாங்கி மூலம்) விநியோகம் செய்யும் குடிநீரையே பயன்படுத்துகின்றனர்.

அண்மை நாட்களாக இக்குழாய் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரானது மக்களின் தேவையை பூர்த்தி செய்ய காணாத நிலை ஏற்படுகின்றது எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

முன்பு வேலணையில் வசித்த மக்களின் தொகையிலும் பார்க்க தற்போது கூடுதலான மக்கள் வசிக்கின்றனர். இதனால் குடிநீரின் தேவையின் அளவு அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆனால் முன்னைய காலங்களில் சுமார் 1- 1 1/2 மணி நேரமே நீர்விநியோகம் செய்யப்பட்டது. சனத்தொகை அதிகரித்த பின்னரும் அதே நேர இடைவெளியிலேயே நீர் விநியோகம் செய்யப்படுவதால் முழு மக்களும் நீரைப் பெற முடியாத நிலை ஏற்படுகின்றது. இதனால் நீர்விநியோகம் செய்யும் இடங்களில் தேவையற்ற சச்சரவுகள் இடம்பெறுகின்றது. அதிகமான இடங்களில் நீர் பெறாது வெற்றுப் பாத்திரங்களுடன் திரும்புவதை அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே இப்பகுதி மக்களின் குடிநீர் தேவையை கருத்திலெடுத்து நீர் விநியோக நேரத்தை அதிகரித்து சம்பந்தப்பட்டோரிடம் இப்பகுதி மக்களும் கிராமமட்ட பொது அமைப் புக்களும் கோரிக்கை விடுகின்றனர். (2-22)




## மஹோற்சவம்

(வேலணை)

புங்குடுதீவு சிறி இராஜ ராஜேஸ்வரி அம்மன் (கண்ணகை அம்மன்) ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 27 ஆம்திகதி இரதோற்சவமும் சித்திரை பௌர்ணமி தினமான 28 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ஓ-4-22)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யாழ்.அத்தியடி அருள்மிகு ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை மாலை சப்பறமும், 14 ஆம்திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் வியாழக்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 6.15 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4-22)

## செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பாடசாலைகளில் தரம் 6,7,8,9 மாணவர்களுக்கு ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியுடன் தவறாது சமுகமளிக்குமாறு தென்மராட்சி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.ஸ்ரீதரன் அறிவித்துள்ளார். (ஓ-29)

## 'கிட்ஸ் கார்டின்' செயல்திட்ட பூர்த்தி விழா

(சாவகச்சேரி)

பண்டிதர் வேலுப்பிள்ளை நிதியத்தின் அனுசரணையுடன் 2009 இல் தரம் 3 இல் கல்வி கற்ற மாணவர்களுக்கு ஆரம்பித்து நடத்தப்பட்ட கிட்ஸ் கார்டின் செயல்திட்டம் 2010 இல் தரம் 4 இல் நிறைவடைகிறது.

இதன் பூர்த்தி நாளை சனிக்கிழமை மு.ப 9 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் ஆங்கில உதவிக்கல்விப் பணிப்பாளர் வே.தரன் தலைமையில் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் யாழ் பல்கலைக் கழக ஆங்கில கற்கைகள் நிலைய தலைவர் எஸ். சுந்தரேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க உள்ளார். (ஓ-29)

## இயேசு சிலுவையில் மரணிக்கும் நிகழ்வு

(குருநகர்)

குருநகர் புனித யாகப்பர் ஆலய தவக்கால பெரியவெள்ளி ஆராதனை இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

பெரிய வெள்ளி ஆராதனையுடன் திருப்பலி முடிவுற்றதும் பாரம்பரியமாக நடத்திவரும் உடக்குப்பாசின் ஒரு பகுதியான இயேசு சிலுவையில் மரணிக்கும் நிகழ்வு இயங்கு நிலையில் காண்பிக்கப்படவுள்ளது. (ஓ-39)

## 'ஞானச்சுடர்' வெளிவந்துள்ளது

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையால் மாதந் தோறும் வெளியிடப்படும் ஆன்மீக சஞ்சிகையான 'ஞானச்சுடர்' சஞ்சிகையின் பங்குனிமாத மலர் வெளி வந்துள்ளது.

இதில் ஆசாரக்கோவை, சு.அருளம்பலவாணரின் சிவபுராணம், ஆ.மகேசுவின் கல்லெறிந்த காதல், சிறுவர் கதைகள், வாரியார் சுவாமிகளின் இமயலோகம் செல்லும் வழி, சைவ நற்சிந்தனை, நாலாயிரம் திவ்விய பிரபந்தம் மற்றும் தொடர் கட்டுரைகள் உள்ளடங்கியதாக வெளிவந்துள்ளது. (ஓ-4-35)

## பண்ணிசைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் வட இலங்கை சங்கீத சபையினதும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினதும் பாடவிதானத்திற்கமைய இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பை ஒவ்வொரு சனி, ஞாயிறு விடுமுறைத் தினங்களில் பிற்பகல் 3 மணி முதல் 4.30 மணி வரை நடத்தி வருகின்றனர்.

இப்பயிற்சி வகுப்பில் மாணவர்கள் மட்டுமல்லாது சிறுவர்கள், பெரியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றி பயன்பெறலாம்.

பயிற்சிபெறும் அனைவருக்கும் பரீட்சை நடத்தி சித்தியெய்தவர்களுக்கு மன்றம் நடத்தும் ஆடிமாதப் பூரணைத் திருமுறைப் பெருவிழாவில் சான்றிதழ், பரிசுகள் வழங்கப்படும் என மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவிக்கின்றார். (ஓ-4)

நரி தன் கனவில் கூட கோழிகளை எண்ணிக்கொண்டே இருக்கும்.

-வாலஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வேட்பாளப் பெருமக்களுக்கு எம் இனிய அன்பு மடல்

அன்புசால் வேட்பாளப் பெருமக்களுக்கு! கூப்பிய கரத்தினராய் வணக்கம்.

நீங்கள் சிவபூசையில் இருக்கின்றீர்கள். இந்த நேரத்தில் நாம் எழுதும் கடிதம் கரடியாக உங்களுக்குத் தெரிந்தால் மன்னிக்குக! உங்கள் சிவபூசையில் தமிழ் மக்கள் நன்மை பெறுவதற்காக இந்த மடல்.

தேர்தல் நெருங்குகின்றது. எவ்வளவு விரைவாக வாக்காளப் பெருமக்களைச் சந் தித்து அவர்களின் ஆதரவைப் பெற முடியமோ அந்தளவு வேகத்தில் நீங்கள் செயற்படுவது எமக்கு நன்கு தெரியும்.

நேரமேயில்லை. தேர்தல் களத்தில் நீங்கள் களைத்து வியர்த்து நிற்கும் நிலை கண்டு தெய்வத்தால் ஆகாதெனினும் மெய்வருந்தக் கூலி தரும் எனக் கூறிய வள்ளுவனை நினைந்து கொள்கின்றோம்.

இந்த நேரத்தில் யாம் எழுதும் கடிதத்தை வாசிப்பதற்கு உங்களுக்கு நேரமும் காலமும் இடம் தருமோ தெரியவில்லை.

இருந்தும் இந்தக் கடிதத்தை எழுதியாக வேண்டும் என்ற வேணவாவில் எழுதுகின்றோம்.

அன்புக்குரிய வேட்பாளப் பெருமக்களே! இப்போதெல்லாம் பொறுப்பற்ற தன்மைகள் நாட்டில் தலைவிரித்தாடுகின்றன.

எதையும் எப்படியும் கூறலாம் என்ற கலாசாரத்தின் பிடிக்குள் இருந்து எவரும் விடுபட முடியாதவர்களாக இருக்கின்றனர்.

இந் நிலையில் தேர்தலில் போட்டியிடும் உங்கள் பற்றியும் பல கதைகள். இவை உண்மையா? பொய்யா? என்பது பற்றி ஆராய்ந்து நேரத்தை வீணாக்க விரும்பவில்லை.

உங்களைப் பற்றி பொது மக்கள் பலவாறாகப் பேசுகின்றனர். ஒருவேளை இவை நீங்கள் புனைந்து விட்ட கதையாகவும் கூட இருக்கலாம்.

இதில் உண்மைகள் இருக்கலாம். ஏன் ஒட்டுமொத்தமான பொய்யாகவும் இருக்கலாம். அது குறித்து இக் கடிதத்தில் வியாக்கியானம் எழுத விரும்பவில்லை.

ஏனெனில் நீங்கள் எந்தப் பக்கம் என்பதை அறிவதற்கு எங்களிடம் தெய்வீக ஞானம் கிடையாது.

அதேநேரம் வாய்க்கு வந்தபடி கதைக்கவும் விரும்பவில்லை. ஊகங்களையும் முணு முணுப்பது அழகல்ல.

எதுவாயினும் தேர்தலில் போட்டியிடும் நீங்கள் எந்தப் பக்கம் என்பது தெரியாதேயன்றி நீங்கள் அனைவரும் (ஒரு சிலரைத் தவிர) தமிழர்கள் என்ற உண்மை எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

அதனால்தான் இந்த அன்புமடலை உங்களுக்கு வரைகின்றோம்.

அன்புக்குரிய வேட்பாளப் பெருமக்களே! தமிழ் மக்களாகிய நாம் பாவப்பட்டு விட்டோம். எங்களுக்குப் பாவ விமோசனம் தேவை. எங்கள் தாய்மார் கண்ணீர் விடுகின்ற கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

எங்கள் எதிர்காலச் சந்ததியினராவது இந்த மண்ணில் நிம்மதியாக வாழ வேண்டும். எத்தனை இழப்புக்கள், எத்தனை சோகங்கள், எத்தனை மனக் கசப்புக்கள் கொஞ்சமா? இதற்கொரு முடிவு வேண்டாமா?

ஆகையால் உள்ளதைப் பேசுங்கள். உங்களால் செய்யக் கூடியதைக் கூறுங்கள். உங்களை மன்றாட்டமாகக் கேட்கின்றோம். செய்ய முடியாதவற்றைச் செய்வோம் என்று கூறாதீர்கள்.

தெளிந்த உரைகள், தீர்க்கமான எழுத்துக்கள், எங்கும் எதிலும் வாய்மை, நேர்மை இந்தப் பாதையில் பயணிப்போம்.

அது நிச்சயம் எங்களை வாழ வைக்கும். தொடர்ந்தும் நாம் மக்களை ஏமாற்றுவது மகா பாவம்.

# விவசாயிகளின் நெல் அனைத்தையும் கொள்வனவு செய்ய அரசாங்கம் தயார்

## மைத்திரிபால சிறிசேன தகவல்



(கொழும்பு)

விவசாயிகளின் நெல் அனைத்தையும் கொள்வனவு செய்ய அரசாங்கம் தயார் என்றும் அனைத்து நல் உற்பத்தியையும் கொள்வனவு செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை தற்போது அரசாங்கம் மேற்கொண்டுள்ளது என்று விவசாய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதுவரை 16 ஆயிரத்து 800 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதோடு தற்பொழுது நாளாந்தம் 50 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்படுகிறது என குறிப்பிட்டார்.

மகாவலி நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியதாவது,

விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு செய்வதற்கோ விவசாயத்துறையை மேம்படுத்தவோ அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென ஐ.தே.க. வும் ஜே.வி.பியியும் குற்றஞ்சாட்டி வருகின்றன. இதுவரை ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களில் எமது அரசாங்கமே விவசாயிகளுக்கு அதிக நிவாரணங்கள் வழங்கி விவசாயத்துறையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐ.தே. க. ஆட்சிக் காலத்தில் நெல்லை விற்க முடியாமல் விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டனர். ஆனால் இன்று விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

பராக்கிரமபாகுவிற்குப் பின் னர் தமது ஆட்சியில் (2002-2004) நெல் உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைந்ததாக ரணில் கூறி வருகிறார். தனது ஆட்சியில் நெல் சந்தைப் படுத்தும் சபை களை மூடியதோடு உரமா னியத்தை நிறுத்தியதை அவர் மறந்துவிட்டார்.

இம்முறை பல வருடங்களின் பின்னர் வடக்கிலும் நெல் உற்பத்தி செய்யப்பட் டுள்ளது. இம்முறை கூடுதல் நெல் உற் பத்தி கிடைக்கும் என நம்புகிறோம் என்றார்.


(2-6)

## உடுவில் பிரதேச செயலரின் அறிவித்தல்

உடுவில் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த நளினி தயாபரன் என்னும் நபருடைய முக்கியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதால் அவரோ அல்லது அவரது உறவினர்களோ எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு உடுவில் பிரதேச செயலர் கேட்டுக் கொள்கின்றார்.

(ஓ)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



## பிரதோஷத்தின் சிறப்பு

பிரதோஷத்தின் பொருள் ,அதன் தத்துவம் என்ன என்று தெரியுமா? காலை வேளையை உஷா என்று கூறுவார்கள். இரவின் முன்நேரத்தை தோஷா என்று அழைப்பார்கள். இக்காலம் வழிபாட்டிற்கு உரியதாகும். அவற்றிலும் *பிரதோஷ காலம்* என்பது சிவ வழிபாட்டிற்கே உரிய காலம் என்பதால் அந்த வேளையை மேலான *தோஷா* என்ற பொருளில் *பிரதோஷா* அல்லது *பிரதோஷம்* என்று அழைக்கின்றனர்.

வளர்பிறையில் திரயோதசி அன்றும் தேய்பிறையில் திரயோதசி அன்றும் மாலை 4.30 மணிமுதல் 6 மணி வரையிலும் உள்ள காலம் பிரதோஷ காலமாகும். இறைவன் நந்தியில் இரண்டு கொம்புகளுக்கு நடுவில் நின்று நடனம் செய்து தேவர்களுக்குத் தரிசனம் தந்து அருளிய சிறப்புடைய வேளை இது.

எனவே இந்த வேளை பிரதோஷ புண்ணிய காலம் என்று வழங்கப்படுகிறது. இந்தக் காலத்தில் சிவபெருமானை வழிபடுவது மிகப்பெரிய புண்ணியச் செயலாகும். சிவதரிசனத்திற்கே உரிய காலமாகும்.

# வெள்ளி நற்சிந்தனை

# பக்தியின் மொழி தமிழ் 117

இறைவன் மீது அன்பு பூண்ட அடியார்கள் தமது அநுபவத்தைப் பாடல்களிலே பதிவு செய்து வைத்துள்ளனர் திருஞானசம்பந்தர் பல்வேறு திருத்தலங்களுக்கும் சென்று அங்கு வீற்றிருக்கும் இறைவனையும் இறைவியையும் பற்றிய தனது அநுபவத்தை பாடல்களிலே சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.தமிழகத்துக்கு வெளியே இலங்கையிலுள்ள இருதலங்களையும் பாடியுள்ளார்.அப்பாடல்களில் பதிவு செய்யப்பட்ட பக்தி அனுபவம் தனித்துவமானது. வழிபாடு செய்யும் அடியவரை சம்பந்தர் ஆற்றுப்படுத்தும் முறைமையால் அவரது தொண்டுப்பணி புலனாகின்றது.

திருக்கோயில் பற்றி அறியவிரும்புகின்றவர்களுக்கு அவர் தருகின்ற தகவல்கள் பயனுள்ளவை சம்பந்தர் இலங்கைக்கு வந்து நேரில் திருக்கோணச்சரத்தை தரிசித்தது பற்றிய குறிப்பு எதுவுமில்லை எனினும் பாடல்களில் கூறப்பட்ட விடயங்கள் மிகவும் பொருந்துவதாக உள்ளன. முதலிலே கோயிலில் வீற்றிருக்கும் இறைவன் தோற்றத்தைப் பாடியுள்ளார். திருவடிகளிலே கட்டப்பட்ட வீரக்கழலும் இடையிலே சுற்றியுள்ள அரவமும் வாமபாகத்து உமையம்மையின் திருவடிச் சிலம்பும் ஒலித்துக் கொண்டிருக்கும் ஓசை காதில் கேட்கிறது. நிர்மலமானவருடைய நீறணிந்த திருமேனி பார்வையில்படுகிறது. அவருடைய பாகத்திலே மலைமகள் அமர்ந்திருக்கும் காட்சியைக் காட்டுகிறார். இருவருமாக இணைந்திருக்கும் தோற்றம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது.

அடுத்துச் சம்பந்தர் காட்டும் காட்சி கோயிற்புறச் சூழலாகும் கடற்கரையில் அமைந்த கோயில் என்பதால் தோற்றப் பொலிவும் சிறப்பாகத் தெரிகிறது. கடற்கரைச் சூழலில் சந்தனமரங்களும் அகிற்கட்டைகளும் நிறைந்து கிடக்கின்றன. அவற்றைவிடப் பல்வேறு விதமான மணிகளும் அளவின்றிக் காணப்படுகின்றன. இந்த இயற்கை வளங்கள் மலிந்த காட்சியோடு ஒலிக்கின்ற கடல் பற்றியும் காட்சிப்படுத்தியுள்ளார். புரண்டு வரும் கடல் அலைகளுடன் முத்துக்களும் சேர்ந்து வருகின்றன. இக்காட்சியை *நித்திலம் கொழிக்கும்* எனப் பாடலிலே குறிப்பிட்டுள்ளார். *கொழித்தல்* என்ற சொல் யாழ்ப்பாணத் தமிழ் பேச்சு வழக்கில் இன்றும் பயன்படுத்தப்படுகிறது. கலந்து கிடக்கும் தானிய வகைகளை வேறுபடுத்துவற்குச் சுளகிலே போட்டுக் கொழித்து எடுப்பதாகக் கூறுவர் அதுபோல திருக்கோணமலைக் கடற்கரையில் கடலில் இருந்து எழுந்து வரும் அலைகள் ஏனைய பொருட்களோடு முத்துக்களைக் கொழித்துத்தரையிலே பரவச் செய்துள்ளன. இயற்கைச் செல்வ வளம் பெற்ற கோயிலின் புறச் சூழலைப் பாடும் சம்பந்தர்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இலங்கைத் தீவின் விளைபொருட் சிறப்பையும் உட் பொதிந்துள்ளார். கோயிலை அண்மித்த கடற்கரைப் பிரதேசம் கற்பாறைகள் கொண்டது அதன் மீது அலைகள் வந்து மோதும் போது பேரொலி செய்கிறது இக்காட்சியைக் *குரை கடலோரம்* என வர்ணித்துள்ளார். வழிபாட்டுத் தலங்களின் புறச்சூழல் இயற்கையழகோடு பொலிவதை எல்லோரும் சென்று காண வேண்டும் என்பதே சம்பந்தரது விருப்பம் என்பதையும் பாடல் நன்கு உணர்த்துகின்றது. தமிழகத்தில் இருந்து கடல் கடந்து வந்து திருக்கோணேஸ் வரத்தை வழிபடவேண்டும் என்ற ஆவலை எல்லோருக்கும் சம்பந்தர் ஊட்டியுள்ளார்.

"நிரைகழல் அரவம் சிலம்பொலியலம்பும் நிமலர் நீறணி
திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய் புணர்ந்த வடிவினர்
கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் கார் அகிற் பிளவும் அளப்பெரும்
கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை
அமர்ந்தாரே"


# பாராளுமன்றத் தேர்தல் 2010





ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்
(தோழர் ரங்கன்)
வடமராட்சி வலய அமைப்பாளர்





அலெக்ஸாண்டர் சூசைமுத்து
(தோழர் சார்ள்ஸ்)
தென்மராட்சி வலய அமைப்பாளர்




கந்தசாமி கமலேந்திரன்
(தோழர் கமல்)
தீவக வலய அமைப்பாளர்




சந்திரகுமார் முருகேசு
(தோழர் அசோக்)
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்




பசுபதி சீவரட்னம்
(தோழர் கி.பி -ஜீவா)
தேசிய அமைப்பாளர்




முருகுப்பிள்ளை சிறிபதி
முன்னாள் ஹாட்லிக் கல்லூரி அதிபர்




சில்வேஸ்த்திரி அலென்ரின்
(தோழர் உதயன்)
யாழ் மாவட்ட அமைப்பாளர்



## கெளரவ அமைச்சர் 9
## கே.என். டக்ளஸ் தேவானந்தா

(செயலாளர் நாயகம், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)

- வன்னிப் பெருநிலப் பிராந்தியத்தை வளங்கொழிக்கும் பிரதேசமாக மாற்றுதல், விவசாயச் செய்கைக்குத் தேவையான மானியத்தை விவசாயிகளுக்கு அரசுடன் இணைந்து முழு அளவில் பெற்றுக்கொடுத்தல்.
- வன்னிப் பிராந்தியத்திலுள்ள பாடசாலைகள் அனைத்தையும் துரித கதியில் மீள்நிர்மாணம் செய்து முழுக் கல்வியையும் எமது சகோதரர்களுக்கு வழங்குதல்.
- வன்னிப் பிராந்தியத்தில் தொழிற்சாலைகள் பலவற்றையும் தமிழ் மக்களாகிய நாமே அமைத்து, அந்தப் பிரதேச மக்களின் வேலைவாய்ப்புக்களை நாமே நிறைவுசெய்து, வேலையற்றவர்கள் என்ற ஒருவர் இல்லாத நிலையை நாமே உருவாக்குவோம்.
- வன்னிப் பிராந்தியத்தின் கடல் வளத்தை முற்று முழுதாகப் பயன்படுத்துவதற்கான முழு அளவிலான வேலைத்திட்டமொன்றை அரசினூடாக முன்மொழிவோம், கடற்தொழில் மக்களின் வளர்ச்சிக்காக முழு அளவில் இந்த அரசைப் பயன்படுத்துவோம்.
- கடலுணவுப் பொருள்களுக்கான தொழிற்சாலைகளை முல்லைத்தீவு, பூநகரி, மன்னார் மாவட்டங்களில் நவீன மயமாக அமைப்போம். இதனூடாக வெளிநாட்டு நாணயங்களில் எமது பிரதேசத்தின் ஏற்றுமதியைச் செய்வோம். இதனால் எமது வளம் கொழிக்கும். மக்களின் துன்பங்கள், துயரங்கள் நின்றுபோகும். வளமான வாழ்வுக்கு எதிர்வரும் 5 ஆண்டுகளையும் புத்திசாதுர்யமாகப் பயன்படுத்துவோம்.
- இந்த 5 ஆண்டுகளைச் சரியாகப் பயன்படுத்தாவிட்டால் ஏலவே வீணடிக்கப்பட்ட 62 ஆண்டுகளுடன் கூட்டி, 67 ஆண்டுகள் வீணடிக்கப்படும் என்பதை தெட்டத் தெளிவாக அறியத்தருகிறோம்.

X

**வெற்றியின் சின்னமாம் வெற்றிலைச் சின்னத்தில் யாழ் மாநகரை வென்றெடுத்தோம் மீண்டுமொரு மகத்தான வெற்றியைப் பெற்று உரிமையையும் அபிவிருத்தியையும் வென்றெடுப்போம்**

(வி-5012)

# கங்குலி அதிரடியில் கொல்கத்தா வெற்றி

(கொல்கத்தா)

அணித்தலைவர் கங்குலியின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் கொல்கத்தா நைட் ரைடேர்ஸ் அணி 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தியன் பிறிமியர் லீக் (ஐ.பி.எல்.) லீக் அமைப்பில் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் லீக் சுற்றில் 30ஆவது போட்டி நேற்று கொல்கத்தாவில் நடைபெற்றது.

இப் போட்டியில் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி கங்குலியின் அதிரடி ஆட்டத்தின் மூலம் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 181 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் கங்குலி 54 பந்துகளில் (9 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 88 ஓட்டங்களையும் டேவிட் ஹசி 27 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 31 ஓட்டங்களையும் புஜாரா 17 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜாஸ்கரன் சிங், அன்ரு சைமண்ட்ஸ், பிரஜன் ஓஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 182 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை யிழந்து 157 ஓட்டங்களைமாத்திரமெடுத்து 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ஹேர்கல் கிப்ஸ் 45 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 50 ஓட்டங்களையும் அன்ரூ சைமண்ட்ஸ் 37 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 45 ஓட்டங்களையும் மோனிஸ் மிஸ்ரா 16 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 29 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஷேன் பொன்ட், அஜித் அகாக்கர், முரளி கார்த்திக், அஞ்சலோ மத்யூஸ் மற்றும் கிறிஸ் ஹயில் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தான் விளையாடிய 8 ஆவது போட்டியில் 4 ஆவது வெற்றியைப் பதிவு செய்து 8 புள்ளியைப்பெற்று 5ஆவது இடத்தைப்பிடித்தது.

இதேவேளை டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 7ஆவது போட்டியில் 4 ஆவது தோல்வியை சந்தித்தது.

## வன்னியில்...

துள்ளது.

எனினும் அவற்றைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரே புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என அரசு தெரிவித்து வருகின்ற போதும் அரசு தமிழ் மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகள் போலியானவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## முன்னாள்...

ளதாக இலங்கை மீள்குடியேற்ற அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பம்பைமடு முகாமில் இவர்களை விடுவிக்கும் வைபவம் நடந்துள்ளது. இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் எதிர்வரும் 3 ஆம் திகதி பெற்றோர்களிடம் ஒப்படைக்கப் படுவார்கள் என்றும் அமைச்சர் றிசாட் பதியுதீன் குறிப்பிட்டுள்ளார். (ச-5)


பாசமிகு யாழ். மாவட்ட வாக்காளப் பெருமக்களே!

எங்கள் அன்பிற்கினிய தோழரும், எமது கட்சியின் தலைவருமான தோழர் ஸ்ரீதரன் அவர்கள் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காகவும், சுயநிர்ணய அதிகாரங்களைப் பெறுவதற்காகவும் தமிழ்மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவும் தமிழர்கள் மத்தியில் சமத்துவம், சகோதரத்துவம் நிலைபெற வேண்டும் என்பதற்காகவும் கடந்த 35 ஆண்டுகளாக பல தியாகங்களைச் செய்து மக்களுக்காக விடாது உழைத்து வருபவர்.

கொண்ட கொள்கைகளில் உறுதியான தோழர் ஸ்ரீதரன் அவர்கள் மரணத்தின் வாயில்களைக் கண்டு கடந்து வந்தவர். பேராபத்துகளின் மத்தியிலும் மக்களுக்காக தொடர்ந்து பணியாற்றி வருகின்றார். அவர் தமது கட்சித் தோழர்கள் மத்தியில் மட்டுமல்லாது ஏனைய அணிகளின் உறுப்பினர்கள் மத்தியிலும் எப்போதும் கண்ணியமாகவும் கனவானாகவும் நடந்து வந்துள்ள பண்பாளர், பணத்துக்காகவோ, பதவிகளுக்காகவோ யாரிடத்திலும் விலைபோகாத உறுதியான நெஞ்சமும் நேர்மையான நடத்தையும் கொண்ட போராளி அவர்,

எதிர்வரும் தேர்தலில் உங்கள் அரிய வாக்குகளை அள்ளி வழங்கி அவரை உங்கள் நாடாளுமன்றப் பிரதிநிதியாக தெரிவு செய்யுங்கள்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மெழுகுதிரி சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு தோழர் ஸ்ரீதரன் அவர்களின் இலக்கமான 6க்கு நேரேயும் உங்கள் புள்ளடிகளை இடுங்கள்.



ஸ்ரீதரன் (தோழர் சுகு)

மெழுகுதிரியே எங்கள் சின்னம்

ஸ்ரீதரனே எங்கள் பிரதிநிதி



பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி


# சொகைப் மலிக்-சானியா திருமணம்
## நீதிமன்றம் செல்லப் போவதாக எச்சரிக்கை
## ஆயிஷாவின் தந்தை விடுத்துள்ளார்

(கராச்சி)

சொகைப் மலிக்-சானியா திருமணம் தொடர்பில் மலிக்கின் முதல் மனைவியான ஆயிஷாவின் தந்தை சித்திக் நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சித்திக் கருத்துத் தெரிவிக்கையில்,

எனது மகளை கடந்த 2005ஆம் ஆண்டு சொகைப் மலிக் திருமணம் செய்துகொண்டார். ஆனால் இதுவரை விவாகரத்துச் செய்யவில்லை.

அவர் சானியா மிஷ்சாவை திருமணம் செய்து கொள்வதற்கு நான் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஆனால் எனது மகள் ஆயிஷாவிற்கு முறைப்படி விவாகரத்து அளிக்கவேண்டும். தவறு பட்சத்தில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவேன். என்னிடம் தேவையான ஆதாரங்கள் உள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் திருமணத்துக்குப்பின் சானியா, சொகைப் மலிக் ஜோடி டுபாயில் குடியேறுவதற்கு பாதுகாப்புதான் முக்கிய காரணம் என செய்திகள் வெளியாகியுள்ளன. சானியா பாகிஸ்தானில் தங்குவதில் அவரது குடும்பத்தினருக்குவிருப்பமில்லை. பாகிஸ்தானில்நிலைவி வரும் தீவிரவாத அச்சுறுத்தல்தான் இதற்கு முக்கிய காரணம்.

இந்தியா, பாகிஸ்தான் இடையே நிலவி வரும் மோதல் போக்கும் டுபாயில் குடியேறும் முடிவை தந்துள்ளது. டுபாயில் மலிக்கிற்கு சொந்தமான ஒரு தொடர் மாடியுள்ளது.

இது கடந்த 2008ஆம் ஆண்டு கனடாவில் நடந்த இருபது-20 தொடரின்போது டுபாய் நிறுவனம் ஒன்று மலிக்கிற்கு பரிசாக அளித்தது. எனவே அவர்கள் இருவரும் திருமணத்திற்குப்பின்னர் டுபாயில் குடியேற இருப்பதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### கில் கிறிஸ்ட் வாழ்த்து

பத்திரிகைகளில் சானியா சொகைப் மலிக் திருமணம் பற்றி செய்தி படித்தேன். அவர்களது திருமண வாழ்வு மகிழ்ச்சியாக அமைய எனது வாழ்த்துக்கள் என டெக்கான் சார்ஜர்ஸ் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.

இதேபோல் பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் இம்ரான்கான், தற்போதைய அணித்தலைவர் அப்ரிடி, அப்துல்



ரசாக், கம்ரன் அக்மல், மிஸ்பா ஆகியோரும் சொகைப்-சானியா திருமணத்திற்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இவர்களது திருமணம் வரும் ஏப்ரல்-15 ஆம் திகதி ஐதரபாத்தில் நடக்கவுள்ளதுடன் சானியாவைதிருமணம்செய்யவுள்ளசொகைப் மலிக்குக்கு பாகிஸ்தானில் ஆதரவு பெருகி வருகிறது. அவரது ரசிகர்கள், உறவினர்கள், நண்பர்கள் உட்பட பலரும் சியால் கோட்டில் உள்ள மலிக்கின் வீடு முன்பு ஒன்று கூடி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

பாகிஸ்தான் ரசிகர்களின் ஆதரவு ஆச்சரியம் அளித்தது. மேளதாளங்களுடன் மலிக்கின் வீட்டின் முன் நடனமாடிய இவர்கள் இனிப்புக்கள் வழங்கி தங்களது சந்தோசத்தை வெளிப்படுத்தினர்.

## சரத் பொன்...

பொன்சேகாவின் உடல் நலத்துக்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுள்ள போதிலும் அனோமா பொன்சேகா தனது பாதுகாப்பை உறுதி செய்து கொள்ள வேண்டியது அவசியம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தான் அவ்வாறு தெரிவித்தது தேர்தல் காரணங்களில் மரண அச்சுறுத்தல் விடுக்கப்படலாம் என்பதைக் கருத்தில் கொண்டே எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஏ-5)

## அரசியல் மறு சீரமைப்பை விட...

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு முக்கியமான விடயம் நடந்தது. நீங்கள் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதல்ல கேள்வி. ஆனால் நீங்கள் வாக்களிக்கக் கூடிய உரிமை உங்களுக்கு கிடைத்திருக்கின்றது.

அதன் மூலம் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதுதான் உண்மை. 30 ஆண்டு காலமாக உங்களுடைய உரிமைகளை நீங்கள் இழந்திருந்தீர்கள். அதனைப் பெற்றுத் தருவதுதான் எங்களுடைய முக்கிய குறிக்கோள்.

உங்களுடைய விவசாயம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மீன்பிடித் தொழில் வளம் பெற வேண்டும். உங்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அவைகளை ஏற்படுத்தித் தருவதன் ஊடாக நான் என்னுடைய எதிர்காலக் கோட்பாடுகளை வகுத்துக் கொள்வேன். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற வேறுபாடில்லாமல் நாம் அனைத்து மக்களையும் ஒன்றாகவே பார்க்கின்றோம்.

### தமிழில் உரை

உங்கள் பகுதியில் மீண்டும் உங்களைச் சந்திக்க வந்ததில் நான் சந்தோஷப்படுகின்றேன். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் தந்த ஆதரவுக்கு நான் நன்றி கூறுகின்றேன்.

ஜனநாயக வழியில் செயற்படுவதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. 30 வருட காலப் பயங்கரவாதம் இப்போதில்லை. நீங்கள் பயம், சந்தேகம் இல்லாமல் நிம்மதியாக வாழ முடியும். நீங்கள் பயமில்லாமல் எங்கும் பயணம் போகலாம்.

மக்கள் சபை மூலம் உங்கள் பிரதிநிதிகளே உங்கள் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வார்கள். அப்போது உங்கள் வாழ்வு மேம்படும்.

உங்கள் எல்லோருக்கும் ஒளிமயமான எதிர்காலம் நிச்சயம் உண்டு. முகாம்களில் உள்ள உங்கள் பிள்ளைகளுக்கு புனர்வாழ்வு வேண்டும். இன்று முகாம்களிலுள்ள 164 பிள்ளைகள் அவர்களது தாய், தந்தையர்களிடம் செல்லவுள்ளார்கள்.

அதற்கான ஏற்பாடுகளை நாம் செய்துள்ளோம். வெகுவிரைவில் ஏனையவர்களும் விடுவிக்கப்படவுள்ளார்கள். புனர்வாழ்வு பெற்ற 48 மாணவ, மாணவிகள் உயர் கல்வி பெற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் செல்லவுள்ளார்கள்.

யாழ்.பல்கலைக்கழகத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம். பொறியியல்துறை வளாகத்தையும் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கவிருக்கின்றோம்.

மீண்டும் யாழ்தேவி அன்றுபோல சுதந்திரமாகப் போய் வருவதை நீங்கள் வெகுவிரைவில் காண்பீர்கள். வடக்கின் வசந்தம் உங்கள் வசந்தம். அது இந்த நாட்டின் வசந்தம்.

ஏ-9 பாதையூடாக நீங்கள் எங்கும் போய் வரலாம். 30 வருட காலமாக நீங்கள் அனுபவித்த துயரங்கள் இனியும் வேண்டாம். இந்த நாட்டில் இனவாத அரசியல் இனிமேல் வேண்டாம்.

குறுகிய எண்ணம் வேண்டாம். ஆசியாவில் கேந்திரம் மிக்க நாடாக எமது நாட்டைக் கட்டிஎழுப்புவோம். எமக்கு வளமான எதிர்காலம் உருவாகும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ச-5,14,30)

## இணைந்து ஆட்சியமைப்பது குறித்து...

ஆட்சி அமைப்பதற்குத் தேவையான நாடாளுமன்றப் பலத்தைப் பெற்றுக் கொள்

வதற்குச் சில ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் உதவியைக் கோரவுள்ளதாக ஜனநாயக தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

உத்தியோகப்பற்றற்ற ரீதியில் பல உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் உட்கட்சிப் பூசல்களை தமது அரசியல் கட்சியின் இலாபங்களுக்காகப் பயன்படுத்தத் தயங்கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.(ச–5)

---

## தமிழர் விடுதலைக் கூட்டணி



வீ.ஆனந்தசங்கரி

1

வெற்றுக் கோசங்கள் வேண்டாம்

வீழ்ந்த மக்களுக்கு கரம் கொடுப்போம்

X



ஏழாலை த.திருஞானசம்பந்தர் J.P

(Ret. Station Master)

3

(சி-5017)

---

## தமிழ்க் காங்கிரஸ்



X

10

(687)

**S.வரதராஜன்**

(முதன்மை வேட்பாளர்)

பிரபல பொருளியல் ஆசிரியர்

(சி-5019)

---

## சுரேஷ் க. பிறேமச்சந்திரன்



நிலையானதும்

வலுவானதுமான

தீர்வை நோக்கி..

X

3

இலங்கை தமிழரசுக் கட்சி

**தமிழ் தேசியக் கூட்டமைப்பு**

(சி-5018)

---

## தமிழ் மக்களின் மீதான இன அழிப்புக்கு எதிரான எமது குரல்கள் ஓயப்போவதில்லை...

வன்னி மீதான ஆக்கிரமிப்புப் போரின் போது அரச படைகளால் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் பக்கச் சார்பற்ற சர்வதேச நீதிவிசாரணை நடத்தப்பட வேண்டும்.

வன்னி மீதான போரின்போது படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொது மக்களுக்கு சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

வன்னி அகதிகள் மீள்குடியேற்றம் தொடர்பான விடயங்கள் சர்வதேச நிறுவனங்களின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மன்னிப்பளித்து விடுதலை செய்யப்படவேண்டும்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரச படைகளாலும் துணை இராணுவக் குழுக்களாலும் கடத்தப்பட்டுக் காணாமல் போனோர் தொடர்பாக சர்வதேச நீதிவிசாரணை நடத்தப்படவேண்டும்.

தமிழ் இனத்தை அழிப்பதற்கு பயன்படுத்தி வந்த அவசர காலச்சட்டம், பயங்கரவாதச் சட்டம் என்பன உடன் நீக்கப்பட வேண்டும்.

தமிழர் தாயகப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட இராணுவ மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

(சி-5020)



**செல்வராசா கஜேந்திரன்**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

முன்னாள் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்

X 12

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

---

## பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2010

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு

வலி தந்தாரை தோற்கடிப்போம்-நம்

விதி வெல்ல வாக்களிப்போம்

X

10

இலங்கைத் தமிழரசுக் கட்சி

(சி-5015)



தன்னலமற்ற சேவையாளன்

தமிழர் வாழ்வுக்கு விடிவெள்ளி

தீவகம் தந்த தவப் புதல்வன்

சிவஞானம் சிறீதரனுக்கே எங்கள் வாக்கு

**சிவஞானம் சிறீதரன்**

அதிபர், கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம் (கனிஸ்ரா)

தீவக வாக்காளப் பெருமக்கள்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.